பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 29 புதன்கிழமை (13.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :229

### போராளிகளின் பாதுகாப்பான பயணம்:

## அரசு நேற்று அனுப்பிய பதிலில் புலிகளுக்குத் திருப்தியில்லை

கொழும்பு,ஜூலை13

விடுதலைப் புலிப் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கான வழிகள் குறித்து அரசு சமர்ப்பித்த திட்டத்தில் புலிகளுக்குத் திருப்தியில்லை என்று தெரியவருகிறது.

கடந்த 26 ஆம் திகதி வன்னியில் இருந்து கிழக்கு நோக்கி இராணுவப் பாதுகாப்புடன் சென்றுகொண்டிருந்த போராளிகளின் தொடர் அணி மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் சீற்றமடைந்த புலிகள், தமது போராளிகளின் (16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் ட்ரக் மீது திருமலையில் கிரனேட் வீச்சு; 13 பேர் காயம்!

திருகோணமலை,ஜூலை13

திருகோணமலை மாவட்டம், 3ஆம் கட்டைப் பகுதியிலுள்ள அலஸ்தோட்டம் என்ற இடத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் 13 பொலீஸார் காயமடைந்தனர். அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது.

போராளிகள் உட்பட நால்வர் செல்வநாயகபுரத்தில் கடந்த ஞாயிறன்று படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து முழு அளவிலான அடைப்பு இடம்பெற்ற சமயத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வீதியில் சென்றுகொண்டிருந்த பொலீஸ் ட்ரக் ஒன்றின் மீதே கிரனேட் வீசப்பட்டது என்று திருமலைப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றைய அடைப்பையொட்டி மேலதிகக் கடமைக்காக (16ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. பேரணியில் ஜனசமுத்திரம்!


## அடுத்த ஜனாதிபதிக்கு வெற்றி என லட்சக்கணக்கானோர் கோஷம்

கொழும்பு,ஜூலை13

ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுக் கொழும்பில் நடத்திய 'மக்கள் சக்தி' பாதயாத்திரையின் இறுதிநாளில் பல லட்சக்கணக்கானவர்கள் திரண்டிருந்தனர். லிப்டன் சுற்றுவட்டம் முழுவதும் ஜன சமுத்திரமாகக் காட்சியளித்தது. இதனையொட்டி தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பெருமளவில் பலப்படுத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடத்தவேண்டும் என்றும், நாட்டு மக்களுக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தி கடந்த 10 நாள்களாக நாட்டின் தெற்குக் கரையோர நகரங்கள் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி இந்த மக்கள் சக்திப் பாதயாத்திரையை நடத்தியது. அதன் இறுதிநாள் நேற்றாகும்.

நேற்றையதினம் தெஹிவளையில் இருந்து (16ஆம் பக்கம் பார்க்க)



### கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் 17ஆம் திகதி சந்திப்பு

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப் பொன்று எதிர்வரும் 17ஆம் திகதி மாலை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## காந்தரூபன் நினைவு நிகழ்வில் தலைவர் பிரபாகரன் பங்கேற்பு



கிளிநொச்சி,ஜூலை13

கடற்கரும்புலி மேஜர் காந்தரூபனின் 15ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. தலைவர் வே.பிரபாகரன் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்.

காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'இளங்கதிர்' என்னும் நூலை அறிவுச்சோலை மாணவன் தலைவருக்கு வழங்கினார்.

காந்தரூபன் அறிவுச்சோலையினரும் காந்தரூபன் செஞ்சோலையினரும் இணைந்து நினைவுகொண்ட இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து கடற் கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோரின் திருவுருவப் படங்களிற்கு (16ஆம் பக்கம் பார்க்க)

### போராளிகள் படுகொலைகளைக் கண்டித்து

## திருமலை முற்றாக முடக்கம்!

திருகோணமலை,ஜூலை13

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் உட்பட நால்வரின் படுகொலைகளையும் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுப் பூரண அடைப்பு கடைப்பிடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக நேற்று அடைப்பு இடம்பெற்றது. இதனால், மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியது. வழமையான அனைத்து நடவடிக்கைகளும் (16ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் நிலவும் அமைதியைச் சீர்குலைக்கும் விதத்தில் நீதிமன்றம் நடக்கமுடியாது என்கிறார் பிரதமநீதியரசர்

### பொதுக்கட்டமைப்புக்கு எதிரான ஜே.வி.பியின் வழக்கின் மீதான விசாரணையில் கருத்து

கொழும்பு,ஜூலை13

நாட்டில் நிலவுகின்ற அமைதிச் சூழலைக் குழப்புகின்ற விதத்தில் நீதிமன்றம் நடந்துகொள்ளமுடியாது.

- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு எதிராக ஜே.வி.பியின் 39 எம்.பிக்களும் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் மூன்றின் மீதான விசாரணைகள் நேற்று உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டபோதே பிரதம நீதியரசர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி பொதுக்கட்டமைப்பு உடன்பாடு செயற்படுத்தப்படுவதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு வழங்கும் கோரிக்கை குறித்து நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த மூன்று மனுக்களும் நேற்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அப்போது அரசுத் தரப்பில் சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் ஆஜராகி மனுக்களுக்கு எதிராக வாதாடினார்.

இந்த மனுக்களை ஏற்றுப் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதிக்குமானால், நாடு விபரீதமான ஒரு நிலையைச் சந்திக்கும் என்றார் அவர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜேர்மன், 'போகும்' நகரில்

# யாழ்ப்பாணத்துக்குத் திரட்டப்பட்ட நிதி அம்பலாங்கொடைக்குப் போகிறது!

## வடக்கில் நிலைமை சாத்தியமற்றது என்பதாலாம்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் நீர்சுத்திகரிப்பு இயந்திர ஆலை ஒன்றை அமைப்பதற்கென ஜேர்மனியில் இருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட பணம் இப்போது அம்பலாங்கொடையில் உள்ள ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மீனவர் கிராமமொன்றுக்குச் செல்கின்றது.

இது குறித்து ஜேர்மனியின் 'போகும்' நகரத்திலிருந்து வெளியாகும் 'ஸ்டாட்பிகல் போகும்' என்ற பத்திரிகை வெளியிட்ட தகவலை உதயன் வாசகர்களுக்காகப் போகுமிலிருந்து பகிர்ந்துகொள்கிறார் ஆர்.ஸி.இராமநாதன். சம்பந்தப்பட்ட பத்திரிகையில் இது தொடர்பாக வெளியான செய்தி தொடர்பாக அவர் அனுப்பிய தொகுப்பு வருமாறு:-

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆசியாவில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஜேர்மனிய மக்கள் முன்வந்தனர்.

அழிவுற்ற ஒவ்வொரு நகரையும் ஜேர்மனியில் உள்ள ஒவ்வொரு நகரம் பொறுப்பேறக வேண்டும். அவ்வாறு.செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப முடியும் என ஜேர்மனியின் அதிபர் ஷ்ருடர் தெரிவித்தார்.

அதற்கேற்ப ஜேர்மனியில் உள்ள 'போகும்' நகர மக்கள் 50 ஆயிரம் யூரோ (70 லட்சம் ரூபா) பணத்தைத் திரட்டினர். இந்த நிதியைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நடமாடும் நீர் சுத்திகரிக்கும் நிலையம் ஒன்றை நிறுவி, அதனூடாக அப்பகுதியில் சுத்தமான நீர் கிடைப்பதை உறுதிசெய்வதற்கென 'போகும்' நகரத் தலைவி ஒட்லி ஸ்சோல்ஸ் திட்டமிட்டார்.

இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கென நியமிக்கப்பட்ட THW நிலையத்தின திட்ட இணைப்பாளர் டாக்டர் பெனாட் இஸ்பிரிங்கர் யாழ்ப்பாணத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி இத்திட்டத்தை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

"இப்பகுதி குழப்பங்கள் நிறைந்த பிரதேசமாக உள்ளது. இங்கு பிரிவினைவாதிகள் தனிநாடு கேட்டு அரசுடன் சண்டை பிடித்துவருவதாக எமக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாம் தொடர்ச்சியாக அப்பகுதியிலிருந்து எதிர்மறையான தகவல்களையே பெற்றுக்கொள்கிறோம். அதிகார அலுவலக நிர்வாகத் தடைகள் வேறு. இதனால் இப்போதைக்கு இத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்த முடியாதநிலை உள்ளது.

"அதன் காரணமாகவே, அம்பலாங்கொடையில் உள்ள ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர் கிராமத்தின் மீள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுவரும் THW யுடன் 'போகும்' நகரம் இணைந்துள்ளது." என 'போகும்' நகரத் தலைவி தெரிவித்துள்ளார். (த-க)

## விபத்தில் காயமடைந்த இளைஞர் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை13

நெல்லியடியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிக்கிப் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு மருத்துவமனைக்கு நேற்றுமாலை அனுப்பப்பட்டுள்ளார்.

நெல்லியடி அரசடியைச் சேர்ந்த ரி.துரைசிங்கம் (வயது 28) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

மேற்படி இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது நேர் எதிரே வான் ஒன்று வந்ததாகவும் -

அந்த விபத்தில் இருந்து தப்பமுயன்றபோது துவிச்சக்கரவண்டியோடு மோதுண்டு மேற்படி இளைஞர் தலையில் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (3-ரி)

## புதிய தேர் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை13

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலயத்தில் உருவாக்கப்படவிருக்கும் புதிய சித்திரத் தேருக்கான அச்சு ஏற்றுதல், பூதப்பார் வைத்தல் நிகழ்வுகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. (3)

## 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கிளிநொச்சியில் அறிமுகவிழா சனியன்று!

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுதியான 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கவிதைத் தொகுதிக்கு எழுகலை, இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அறிமுகவிழா நடைபெறுகிறது.

எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பொது ஈகச்சுடர், தேசியக் கொடியேற்றலைத் தொடர்ந்து, வரவேற்புரையை கவிஞர் வேலணையூர் சுரேஸும், அறிமுகவுரையை யோகரட்ணம் யோகியும் நிகழ்த்துகின்றனர்.

மதிப்பீட்டுரைகளை கலாநிதி க.சோமாஸ்கந்தனும், எழுத்தாளர் பு.சத்தியமூர்த்தியும் வழங்க, ஏற்புரையை நூலாசிரியர் புதுவை இரத்தினதுரையும், நன்றியுரையை திருமதி ஆதிலட்சுமி சிவகுமாரும் நிகழ்த்துகின்றனர்.

இவ்விழாவுக்கு இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் எழு கலை, இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (3)

## ஜனாதிபதித் தேர்தல் எப்போது? ஆணையரின் முடிவு விரைவில்

### சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெறுவாராம்

கொழும்பு,ஜூலை13

ஜனாதிபதித் தேர்தல் எப்போது இடம்பெறும் என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் பரவலாக எழுப்பப்பட்டுவரும் சூழ்நிலையில் அதுதொடர்பிலான தமது தீர்மானத்தையும்.,ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் காலத்தையும் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க வெகுவிரைவில் அறிவிக்கவுள்ளாரென தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோருகிறது. இதற்காக மக்களை ஒன்று திரட்டி அதனை வலியுறுத்தும் போராட்டத்திலும் ஐ.தே.க. ஈடுபட்டு வருகிறது. அதேசமயம், ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெறாதென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் மீண்டும் மீண்டும் தெரிவித்துவிட்டார்.

இவ்வாறான சூழ்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான தமது தீர்மானத்தை அறிவிப்பது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் தற்போது யோசனைகளை மேற்கொண்டுவருகிறார் எனவும், இதன் ஓர் அம்சமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெறுவதற்கும் அவர் தயாராகியிருக்கிறார் எனவும் தெரிய வருகிறது. இதற்கிடையில் - இவ்வாறான அபிப்பிராயமொன்று தேர்தல் ஆணையாளரிடமிருந்து கோரப்பட்டால் அதற்குப் பதிலளிப்பது எவ்வாறு என்பது பற்றி சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது ஆராய முற்பட்டிருப்பதாகத் திணைக்களத்தின் உயர் மட்ட வட்டாரங்கள் கூறின. (எ-க)

## ஐயன்கேணியில் மாணவன் குண்டுத் தாக்குதலில் பலி!

செங்கலடி,ஜூலை13

ஏறாவூர் பொலீஸ் பிரிவிலுள்ள தளவாய், ஐயன்கேணி கிராமத்தில் தமிழ் மாணவர் ஒருவர் நேற்றுமுன்தினம் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

குண்டு வீசப்பட்டே இவர் கொலை செய்யப்பட்டார் என்றும் ஏறாவூர் பொலீஸ் நிலைய குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி சீ.எம். சந்திரபால தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு மேல் இடம்பெற்றுள்ளது என்று ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

தளவாய் கிராமத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பேரின்பம் (வயது 19) என்பவரே கொலைசெய்யப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் ஐயன்கேணி தமிழ் மகா வித்தியாலய மாணவர் எனவும் -

சம்பவதினம் இரவு செங்கலடியில் கணனி வகுப்பொன்றுக்குச் சென்றவர், வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயமே கொலை செய்யப்பட்டார் 'எனவும் - விசாரணைகளில் தெரியவந்தது எனப் பொலீஸார் கூறுகின்றனர்.

இந்தக் கொலை தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. எனினும், தளவாய் பிரதேசத்தில் பலரிடம் தாங்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்றும் சந்திரபால கூறினார்.

இவரது சடலம் நேற்று காலை ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (க-3)

## சஞ்சீவன் நினைவாக இன்று நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை13

2000ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் சஞ்சீவனின் 5ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று காலை 9 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த தானம் இடம்பெறவுள்ளது.

யாழ்.இந்து பழைய மாணவர்கள் இணைந்து இரத்ததானம் வழங்க ஏற்பாடாகியுள்ளது. இதேவேளை -

சஞ்சீவனின் நினைவு நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தமிழ் மாணவர் ஒன்றியத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவிருக்கின்றன.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்டப் பிரிவு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. (3)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை13

சுருவில் ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் ஆலய தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றவுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (3-203)

✧ ✧ ✧

யாழ்ப்பாணம், ஜூலை13

அனலையம்பதி நயினாகுளம் கூழாவடியுறை ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும். 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3-203)

✧ ✧ ✧

யாழ்ப்பாணம், ஜூலை13

புங்குடுதீவு கிழக்கு தல்லையற்பற்று முருகப்பெருமான் ஆலய மகாகும்பாபிசேகம் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (3-203)

✧ ✧ ✧

குருநகர்,ஜூலை13

குருநகர் மவுன்கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் மாலை 5.45 மணிக்கு வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழா திருச்செபமாலையுடன் நடைபெறும்.

மறுநாள் காலை 7 மணிக்கு திருநாட் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்று மாலை 6 மணிக்கு திருச்சொரூப பவனியுடன் திருவிழா நிறைவடையும் (3-51-203)

✧ ✧ ✧

யாழ்ப்பாணம், ஜூலை13

காரைநகர் - களபூமி ஸ்ரீ காளிஅம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை காலை 7.15 மணிக்கு நடைபெறவுள்ளது. (3-204)

✧ ✧ ✧

யாழ்ப்பாணம், ஜூலை13

சரவணை வேலணை சங்குத்தறை ஞானபைரவப் பெருமான் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6 மணிகசு நடைபெறவுள்ளது. (3-204)

✧ ✧ ✧

யாழ்ப்பாணம், ஜூலை13

மானிப்பாய் மேற்கு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (3-204)

## நாட்டில் நிலவும் அமைதியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நாட்டில் அமைதிநிலையில் குழப்பம் ஏற்படும். வெளிநாட்டு நிதி உதவி கிடைக்காமல் போகும். அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் பாதிக்கப்படும். பயங்கர விளைவுகள் ஏற்படும்.

"இந்தப் பொதுக்கட்டமைப்பின் நிதி ஆள்கை தொடர்பில் திறைசேரிச் செயலாளர் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் பொதுக்கட்டமைப்பின் நிதி கையாளும் முறைமை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதில் ஏதும் தவறோ, சட்டமுரணான அம்சங்களோ, கொள்கைத் தவறுகளோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"நிதிக்குப் பொறுப்பும், கணக்கும் காட்டும் உரிய ஏற்பாடுகளை திறைசேரி பொறுப்பேற்றுள்ளது.

"இது தொடர்பாகத் திறைசேரி செயலாளரின் சத்தியப்பிரமாண வாக்குமூலங்கள், ஆவணங்கள் ஏதும் தேவைப்படின் அதைச் சமர்ப்பிக்க நான் தயாராக இருக்கிறேன்." - என்றார் சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன்.

எதிர் மனுதாரர்களுள் ஒருவரான நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.கே.டபிள்யூ.குணசேகரா தமது வாதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

இது ஒரு நீதிமன்றத்தால் கையாளப்படும் சட்ட விவகாரமன்று. அரசியல் முடிவின் அடிப்படையிலான விவகாரம். இதில் நீதிமன்றம் தலையிடமுடியாது.

"இந்த விடயத்தில் யாருடைய அடிப்படை உரிமையும் மீறப்படவில்லை. எனவே, இந்த விவகாரத்துக்காக அரசமைப்பின் 126 ஆவது பிரிவின் கீழ் - அடிப்படை உரிமை மீறல் என்ற வகையில் - நிவாரணமோ, உரிய நடவடிக்கையோ கோரமுடியாது. இந்தகைய விவகாரங்களில் சட்டத்தின் தலையீட்டுக்கு வேறு வழிமுறைகள் உள்ளன. அவற்றின் ஊடாகவே மனுதாரர்கள் நீதிமன்றை அணுகியிருக்கவேண்டும். - என்றார் அவர்.

மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா, விடுதலைப் புலிகள் போன்ற ஓர் அமைப்போடு அரசு நிதி கையாள்கை செய்வதை அனுமதிக்கக் கூடாது என்றார். அரசமைப்பின் 44(2) ஆவது பிரிவின் கீழ் இந்தப் பொதுக் கட்டமைப்பு ஏற்பாடு சட்டவிரோதமானது என்று அவர் சொன்னார்.

"விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இலங்கை நீதிமன்றம் இருநூறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது. அவர் இன்னும் பிடிபடாமல் ஒளிந்துள்ளார். அத்தலைவருடன் நிதியை அரசு பகிர்ந்து கையாள அனுமதிக்கலாமா?" - என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

"அதுதானே பிரச்சினை, பிரபாகரனை நீங்கள் பிடித்துக் கொண்டுவாருங்கள். எல்லாம் தீர்ந்துவிடும். அதற்குப் பிறகு எல்லாவற்றையும் சரியாகச் செய்யமுடியும்." என்று புன்சிரிப்புடன் பதிலளித்தார் பிரதம நீதியரசர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

சில விடயங்களைச் சட்டப்படி செய்ய வேண்டும். சில விடயங்களை மனசாட்சிப்படி (தார்மீகப்படி) செய்யவேண்டும். மக்களுக்குப் பணியாற்றும் அரசு வெறும் சட்டத்தை மட்டும் கவனத்தில் கொள்ளமுடியாது. தார்மீகப் பொறுப்பும் அதற்கு உண்டு. சட்டத்தைப் பிடித்துக்கொண்டு, ஆழிப்பேரலை போன்ற அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்காமல் அரசால் இருக்கமுடியாது.

"அதேசமயம், நாட்டின் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் நீதிமன்றம் நடந்துகொள்ள முடியாது.

"வடக்கு - கிழக்கில் பாதிப்புற்றோருக்கு உரிய நிவாரணம் வழங்கும் ஓர் ஏற்பாட்டைச் செய்யும் தார்மீகப் பொறுப்பு அரசுக்கிருப்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

"ஒருபுறம் இந்த ஏற்பாட்டின் மூலம் தமது வாக்காளரின் உரிமை மீறப்படுவதாக மனுதாரர்கள் கூறுகின்றனர். இன்னொரு பக்கத்தில் பொதுமக்களுக்கு இடையூறின்றி நிவாரணம் வழங்கப்படவேண்டுமென அரசு கரிசனை கொண்டுள்ளது. இந்த இரு தரப்பினரையும் நாம் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றைக் கவனத்தில் கொள்வோம்.

"இந்தப் பொதுக்கூட்டமைப்பு ஏற்பாட்டுக்கு எதிராக இடைக்காலத் தடைவிதிப்பதா என்பது குறித்தும், அரசமைப்பின் 126(4) பிரிவின் கீழ் உத்தரவு வழங்குவதா என்பது குறித்தும் 15 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும்."- என்றார் பிரதம நீதியரசர். (க-3)

# ஆசியருக்கு எதிராக பிரிட்டனில் கலவரங்கள் ஏற்படும் அபாயம்!

உலக அரங்கில்

## சீக்கிய குடும்பத்துக்கு அடிஉதை; மசூதிகள் மீதும் வன்முறைத் தாக்குதல்

லண்டன், ஜூலை 15

**பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மசூதிகள் மீது வன்முறைக் கும்பல்கள் திடீர்த் தாக்குதல்களை நடத்திவருகின்றன. இதனால், மதம் மற்றும் இன அடிப்படையில் ஆசியர்களுக்கு எதிரான கலவரங்கள் வெடிக்கலாம் என்று அச்சம் எழுந்துள்ளது.**

கடந்த வியாழக்கிழமை லண்டன் பாதாள ரயில் நிலையங்களில் சக்திவாய்ந்த வெடி குண்டுகள் வெடித்துச் சிதறின. இதில், 52 பேர் இறந்தனர். இந்தத் தாக்குதலில் அல் - கெய்டா தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து இஸ்லாமியர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஆசிய மக்கள் மீது பிரிட்டிஷ் மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

லீட்ஸ், பெல்வெடீர், டெல்போர்ட், பர்கென்ஹெட் ஆகிய நான்கு பகுதிகளில், மசூதிகள் மீது வன்முறைக் கும்பல் திடீர் தாக்குதல்களை நடத்தின. தவிர, கிழக்கு லண்டனிலும் பரிஸ்டோல் பகுதியில் உள்ள மசூதிகளிலும் தாக்குதல்கள் நடந்ததாகத் தகவல்கள் வெளியாகின. இதனால், பிரிட்டனில் வசிக்கும் இஸ்லாமியர்கள் அச்சத்தில் உள்ளனர்.

அதேபோல் ரயில் நிலையங்களில் குண்டு வெடித்த அதே வியாழக்கிழமை மாலை தெற்கு லண்டனில் உள்ள குருத்வாராவுக்குள் போத்தல்களை வெள்ளையர்கள் சிலர் வீசினர். அதில் சம்பந்தப்பட்ட ஐந்து பேரை லண்டன் பொலீஸார் உடனடியாகக் கைது செய்தனர். சவுத்ஹோல், பராட்வே பகுதியில் ஆசியாவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் மீது வெள்ளையர்கள் தாக்குதல் நடத்தினர்.

தீவிரவாத தாக்குதலுக்குப் பின் ஆசியர்கள் மீது தொடர்ந்து நடக்கும் தாக்குதலைத் தடுக்க பிரிட்டிஷ் பாதுகாப்புப் படையினர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இதுகுறித்து பொலிடன் பொலீஸார் கூறுகையில், வெடிகுண்டுத் தாக்குதலில் யார் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது குறித்து விசாரணை நடந்து வரு கிறது. அதை முன்னிட்டு இன அடிப்படையில் நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுக்க 24 மணி நேர ரோந்துப் பணியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் என்று உறுதி அளித்தனர்.

இதற்கிடையில், குண்டு வெடிப்பு சம்பவங்களால் பீதியடைந்த லண்டன் மக்கள் மீண்டும் பணிக்குத் திரும்பினர். அதேபோல், வெஸ்ட்மினிஸ்டர் பகுதியில் மூடப்பட்ட 12 இற்கும் மேற்பட்ட பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டன. பாதாள ரயில் நிலையங்கள் பெரும்பாலனவை வழக்கமாக இயங்கத் தொடங்கி விட்டன. எனினும், கிங்ஸ்கிராஸ் ரயில் நிலையம் மட்டும் இன்னும் செயற்படவில்லை.

### விவாதம் ஆரம்பம்

ஐ.நா. பாதுகாப்புச்சபைச் சீரமைப்புத் தொடர்பான விவாதம் ஐ.நா. பொதுச்சபையில் ஆரம்பமானது. தற்போது 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் மேலும் ஆறு நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் நான்கு தற்காலிக உறுப்பு நாடுகள் ஆகியவற்றைச் சேர்ப்பதற்கான சட்டமூலத்தின் மீதே இந்த விவாதம் நடைபெறுகிறது. (ஒ)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road, Wellawatte, Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road, Jaffna. Tel:021-2226242 Fax:021-2225600
Branch
No:14,New Market Building Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road, Trincomalee.
Tel:026-2221519 Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


## லண்டனில் குண்டு வைத்தோர் இனம் காணப்பட்டனர்

லண்டன், ஜூலை 13

கடந்த வியாழக்கிழமை பிரிட்டிஷ் தலைநகர் லண்டன் சுரங்க ரயில்களிலும் மாடி பஸ்ஸிலும் வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது. இதில் பலியானவர்கள் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்து விட்டது. சுரங்கப்பாதை இடிபாடுகளில் மேலும் உடல்கள் கிடப்பதால் இறந்தவர் எண்ணிக்கை 70 வரை உயரும் என்று அஞ்சப்படுகிறது.


இந்த வெடிகுண்டுத் தாக்குதலுக்கு அல்-கெய்டா இயக்கம் மற்றும் அதன் பிரிவுகள் தான் காரணம் என்பது விசாரணையில் தெரிய வந்தது.

வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திய 30 பேர் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்களில் சிரியாவைச் சேர்ந்த முஸ்தபா சேத்மரியம் நசார், மொராக்கோவை சேர்ந்த முகமது அல்-செர்போசி ஆகியோர் முக்கியமான வர்கள். தீவிரவாதிகள் பயன்படுத்திய செல்போன் மூலம் 12 பேர்களின் [illegible]கள் கிடைத்துள்ளன.

லண்டனில் குண்டுவைத்தவர்[illegible] ரயில்களில் மட்டுமே குண்டுவை[illegible] மிட்டு இருந்தனர். ஆனால், அவ[illegible] வர் தாமதமாக வந்ததால் தன[illegible]தை மாற்றிவிட்டார் என்றும் -

அங்கு வந்த பஸ்ஸின் மாடியில் குண்டை வைத்துவிட்டு வழியில் அவர் இறங்கி விட்டார் என்றும் - கூறப்படுகிறது. (ஒ)

## ஸ்பெயினில் காளை விரட்டு விழா




ஸ்பெயின் நாட்டில் இடம்பெறும் பாரம்பரியக் கலாசார நிகழ்வான காளை விரட்டு விழாவில் பொலீஸ்காரர் ஒருவர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர்.

ஸ்பெயின், பபிலோனா நகரில் கடந்த 7ஆம் திகதி முதல் காளை விரட்டு விழா நடக்கிறது. எதிர்வரும் 14ஆம் திகதி வரை விழா இடம் பெறவுள்ளது. புகழ்பெற்ற இந்த விழாவில் பங்கேற்க அமெரிக்கா, அவுஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகளில் இருந்தும் காளை அடக்கும் வீரர்களும் பொதுமக்களும் வந்துள்ளனர்.

காலை முதல் மாலை வரை தினமும் காளை விரட்டு நடக்கிறது. நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்ச்சியில் காளைகள் முட்டி நான்கு பேர் காயமடைந்தனர். பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட பொலீஸ்காரர் ஒருவரையும் காளை முட்டியது. காயமடைந்த அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

1910ஆம் ஆண்டில் இருந்து நடக்கும் இந்த நிகழ்ச்சியில் காளைகள் முட்டி இதுவரை 15 பேர் பலியாகியுள்ளனர். இந்த ஆண்டு விழாவில், இதுவரை உயிர்ப் பலி எதுவும் நடக்கவில்லை. (ஒ)

## கொலம்பியா விபத்துக்குப்பின் விண்கலம் அனுப்புகிறது நாஸா



விண்வெளியில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச விண்வெளிஆய்வுகூடத்துக்கு அமெரிக்கா அனுப்பிய கொலம்பியா விண்கலம் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நடுவானில் வெடித்துச்சிதறியது.

அதில் பயணம் செய்த இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட 6 பேர் பலியானார்கள். அதன்பிறகு அமெரிக்கா விண்வெளிக்கு விண்கலம் செலுத்துவதை நிறுத்தி வைத்தது.

2 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அமெரிக்கா இப்போது டிஸ்கவரி என்ற விண்கலத்தை அனுப்புகிறது. இதில் 7 விண்வெளி வீரர்கள் செல்கிறார்கள். இன்று இதை விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. டிஸ்கவரி விண்கலம் புளோரிடா மாநிலத்தில் உள்ள கென்னடி விண்வெளித்தளத்தில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அதில் செல்லும் நிபுணர்களும் இறுதிக் கட்டப் பயிற்சியை முடித்துக்கொண்டு விண்கலத் தளத்துக்கு வந்து விட்டனர். அதனைச் செலுத்துவதற்கான நேரக்கணக்கீடு தொடங்கிவிட்டது.

முன்பு கொலம்பியா விண்கலத்தில் இருந்த குறைபாடுகள் இப்போது நீக்கப்பட்டுள்ளன. ஆனாலும் எரிபொருள் தாங்கி மற்றும் அதிக வெப்பத்தை தடுக்கும் கருவி ஆகியவை சரியாக இயங்க வேண்டும் என்பது தான் நாஸா விஞ்ஞானிகள் கவலை.

வானிலையும் 70 சதவீதம் சாதகமாக இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். திட்டமிட்டபடி இன்று விண்கலம் பறக்கும் என்ற நம்பிக்கையுடனுள்ளனர். டிஸ்கவரி விண்கலத்தில் செல்லும் வீரர்கள் கொலம்பியா விபத்தில் பலியானவர்கள் படங்களைக் கொண்டு செல்கிறார்கள். (ஒ)


Jayoda ஜயோதா ජයෝදා

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6147184 முதல் 6160505 வரை சீட்டிழுப்பு இல. 149 திகதி 11-7-2005

வெற்றி எண்கள் 7 0 5 3 9 7 சுப்பர் எண் 13

சுப்பர் ஜக்பொட் பரிசு 3,04,80,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 3,04,80,200/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 13 | 50,000/- | 6,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 120 | 5,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,177 | 500/- | 5,88,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,766 | 50/- | 5,88,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 116,633 | 10/- | 11,66,330/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 121 | 1,000/- | 1,21,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,182 | 100/- | 1,18,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,659 | 20/- | 2,33,180/- |
| | | மொத்தம் | 51,10,510/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 57,13,110/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 3,08,07,450/-
தொடர் இல. 7097807 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 14 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 6159830-7-29 |
| நுவரெலியா | 6149875-7-93 |
| புத்தளம | 6154332-5-43 |
| காலி | 6150173-4-94 |
| கேகாலை | 6148477-8-90 |
| கொழும்பு | 6148441-9-94 |
| ஹம்பாந்தோட்டை | 6151346-2-65 |
| அம்பாறை | 6151744-7-88 |



மூன்றாவது ஆண்டு வெற்றிகரப் பூர்த்தி
TNT
20%
விசேடகழிவு வழங்குகின்றது
எமது சேவைகள்
◆ சர்வதேச கூரியர் சேவை
◆ உள்நாட்டுக் கூரியர் சேவை
◆ சர்வதேச தபால் சேவை
TNT கூரியர் சேவை
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை)
021 222 3771, 0777 270452, 0777 915824.
E-mail:- aitkenspencejf@sltnet.lk
நாங்கள் உங்களது அன்பளிப்புப் பொருள்களை மட்டுமல்ல அவற்றோடு சேர்த்து உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று அங்கு சேர்க்கின்றோம் என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள்!
இவ்விசேட சலுகை 2005-07-31 வரை மட்டுமே



சிவமயம்

# கோண்டாவில் மேற்கு ஸ்ரீ பாரதிபுரம் திருவருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய நூதன உத்தம சப்த தசகுண்ட பக்ஷ (17) பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர் - 13-07-2005 புதன்கிழமை





## ஆதீன முதல்வரின் அருளாசி

கோண்டாவில் ஸ்ரீ பாரதிபுரத்தில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் திருவருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையும் பெருமையும் மிகுந்த அன்னையின் ஆலயம் அலங்கார வீதியும், அழகு மண்டபங்களும் சிற்பங்களும் சிலைகளுமாய் பக்தர்களைப் பரவசப்படுத்தும் வகையில் கோண்டாவில் வாழ் சைவப் பெருமக்களின் முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ளமை போற்றுதற்குரியது.

பால் நினைந்தூட்டும் தாயாகிய பராசக்தி இப்பதியில் புவனங்களுக்கெல்லாம் ஈஸ்வரியாம் புவனேஸ்வரியாக வீற்றிருந்து நல்லருள் பாலிக்கின்றாள். சைவமும் தமிழும் நிறைந்து வீதிதோறும் ஆலயங்களும் தெய்வீகப்பணிகளினாலும் புகழ் பெற்றிருக்கும் கோண்டாவில் பதிக்கு மேலும் நிறைவையும் பொலிவையும் தருவது அன்னையின் ஆலயமாகும்.

இம்மைக்கும் மறுமைக்கும் இன்பந்தர வல்லது ஆலய தரிசனம். அதிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வினைக் கண்டு தரிசித்தல் பெரும்பேறாகும் எனவே அன்னையின் இக்கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து அம்பாளின் அனுக்கிரகத்தைப் பெறுவோமாக.

இக்கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாச்சாரியார்கள், ஆலயபரிபாலன சபையினர் மற்றும் கோண்டாவில் பதிவாழ் அடியார்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## கும்பாபிஷேகம் என்பது என்ன ?

குடநீராட்டு, குடமுழுக்கு என்ற பெயர்களில் வழங்கும் கும்பாபிஷேகம் புதிய கோயில் கட்டப்பெற்றபோதும், பழைய கோயில்களைப் புதுப்பிக்கும்போதும் நடைபெறும் திருவிழா. புனித நீரைக் கும்பங்களிலிருந்து, குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் இராஜ கோபுரம், விமானம் ஆகியவற்றில் தெளிப்பதே இத்திருவிழாவின் முக்கியமான கட்டம். இதற்காகச் சில மாதங்களுக்கு முன்னரே பெரிய அளவில் ஏற்பாடுகள் தொடங்கும். யாகசாலைகள் முதலியன அமைக்கப் பெற்றிருக்கும்.

உலகமும் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய பஞ்ச பூதங்களால் ஆனவை என்று இந்துக்கள் நினைக்கிறார்கள். இவை ஒவ்வொன்றும் ஒரு கருத்தின் சின்னம். நிலம் பொருளைக்குறிக்கும். நீர் உயிர் ஓட்டத்திற்கு அறிகுறி. தீ மனத்தை நினைவூட்டும். காற்று அறிவியலுக்கு அப்பாற்பட்ட சக்திகளுக்குப் பிரதிநிதி, வானம் பேரின்பத்துக்கு அடையாளம். நிலத்துக்கு மஞ்சள், நீருக்கு வெள்ளை, தீக்கு சிவப்பு, காற்றுக்கு கறுப்பு, வானத்துக்கு நீலம். இவ்வாறு பஞ்ச பூதங்கள் பல நிறங்களால் சமயச்சடங்குகளில் உருவகப்படுத்தப்படுகின்றன. நீரும் காற்றும் இன்றி நிலத்தில் யாரும் வாழ இயலாததாகையால், சமயச்சடங்குகளில் ஏனைய மூன்றையும் விட இந்த இரு பதங்களுக்குமே சிறப்பிடம் கொடுக்கப்படுகிறது.

நீரை சிறப்பிக்கும் தலையாய சடங்கு கும்பாபிஷேகம். தூய்மையான தெளிவான நீரை, பக்தி நிறைந்தவர்கள் சுத்தமான பாத்திரங்களில் புனிதமான ஆறுகள் உற்பத்தியாகும் இடங்களில் எடுத்துக்கொண்டு வருவார்கள். இவை கும்பங்கள் எனப்படும். குடங்களில் ஊற்றி மலர்களால் அலங்கரிக்கப்படும். குட நீராட்டு விழாவுக்கென்று போடப் பெறும் கவினுறு கொட்டகையில் அமைந்த யாகசாலையில் வரிசையாகக் கும்பங்கள் வைக்கப்படும். கும்பங்களிலுள்ள நீருக்கு மேலும் சக்தியும் புனிதமும் ஊட்டுவதற்காக புலமையும் ஒழுக்கமும் உடையவர்கள் மந்திரங்களை ஓதுவார்கள். இறைவனுக்குக் கோயில்கட்டும் சீரியமுயற்சியின் மங்களமான முடிவுதான் சம்புரோட்சணம், கும்பாபிஷேகம், குடமுழுக்கு என்ற பெயர்களால் மேற்கண்ட புனிதநீரை ஊற்றுதல். தம் மனத்தில் இறைவன் குடியிருக்கின்றான். எனவே தான் நாம் ஆன்மீக உணர்ச்சி பெற்ற மன,மொழி மெய்களால் தூய்மையாக நடந்துகொள்ளவேண்டும் என்பதை உணர்த்துவதே கும்பாபிஷேகத் தத்துவம்.

இந்தவகையில் கோண்டாவில் ஸ்ரீ பாரதிபுரம் திருவருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் இன்றைய தினம் உத்தம சப்த தச குண்டபஷ (17) பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா மங்களகரமாக நடைபெறுகின்றது.

எல்லாம் வல்ல அன்னை புவனேஸ்வரியின் திருவருள் அகில மெல்லாம் வாழும் உயிர்களை அரவணைக்கவேண்டும். சாந்தி, சமாதானம் நிலவ அவளை நாம் சரண் புக வேண்டும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ அந்த மகா சக்தி இந்தப் புனித நாளில் அருள்பெருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்** B.A. (Hons)
(பணிப்பாளர்,ஈழத்தமிழர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கழகம்)

## அம்பிகையின் திருவருள் எங்கும் பொலிவதாக

அன்பே தெய்வம்: அருளே வடிவம், அன்பும் அருளும் சேர்ந்ததுதான் தெய்வவடிவம். அந்தத் தெய்வ வடிவத்துக்கு ஓர் ஆலயத்தை அமைத்துக்கொடுக்கின்ற பொறுப்பை அம்பிகை என்னிடம் சுமத்தினாள். "அவளருளாலே அவள் தாள் வணங்கி" என்பதற்கிணங்க இந்த மகாசக்தியின் பெருமைகள் எண்ணிலடங்காதவை. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக விளங்கும் புவனேஸ்வரி அம்பாளுக்கு ஒரு திருக்கோயில் அமைந்திருக்கின்றது. அவளின் குடநீராட்டு இன்று மங்களகரமாக நடைபெறுகின்றது.எல்லாம்வல்ல அம்பிகையின் அருட்கடாட்சம் இந்தத் திருப்பணியில் நின்று உழைத்தவர்களுக்குக் கிடைப்பதாக.

என்றும் அன்னையின் திருவருளுடன்
**இராம இளங்கோவன்,** *(தென்னிந்தியா, திருவாரூர் மாவட்டம்.)*

இன்று (13.07.2005) புதன்கிழமை
காலை 5 மணி தொடக்கம்
மாலை 6 மணி வரையுள்ள சுபநேரத்தில்
ஆலயப் பாடல் அடங்கிய ஒலிப்பேழை வெளியீடு
நடைபெறும்.
பாடல் இயற்றியவர்: திரு.மு.சுயர்ஷன்
பாடல் பாடியவர்: திரு.T.M.S.செல்வக்குமார்
இசையமைப்பாளர்: திரு.பத்மநாதன்



## புவனத்தில் எங்கள் புவனேஸ்வரி மாதா

வானாகி, மண்ணாகி, மணியாகி, ஒளியாகி, ஊனாகி எங்கள் உயிராகிய ஸ்ரீபுவனேஸ்வரி அன்னையின் குடமுழுக்கு விழா குவலயத்தில் வசிக்கும் அத்தனை ஜீவராசிகளுக்கும் குதூகலம் அளிக்கும் ஒரு விழாவாக அமைகின்றது.

இயற்கையை வழிபட்ட மனிதன் நாகரிக வளர்ச்சியில் படிப்படியாக முன்னேறி ஒரு வரையறைக்குள் நின்று வேத, ஆகம வழிபாட்டு முறையைப் பின்பற்றி உருவ வழிபாட்டில் ஈடுபட்டுத் தன் வளத்தைப் பெருக்கிக்கொண்டான். இதே போலத்தான் இன்று ஸ்ரீ பாரதிபுரம் என்ற இந்தத் திருப்பதியிலே வேதாகம விதிமுறைக்கு அமைவாக மிளிரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயிலும் விளங்குகின்றது.

கோண்டாவில் கிராமத்தின் எல்லையோடு இணைந்த இப்பகுதியில் இற்றைக்கு நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒருசில ஆன்மீக வாதிகளால் ஒரு சிறு குடிலில் விளக்கு ஏற்றி, ஆராதனை செய்யப்பட்டு வருடத்தில் சில விசேட தினங்களில் வேள்விப்பொங்கல் விழா மூலமாகவும், படிப்படியாக ஒரு கால பூசை, அபிஷேகம், திருவிழா என்கின்ற வளர்ச்சி கண்டு 1982 ஆம் ஆண்டு முதல் நித்திய பூசை, வருடாந்த அலங்கார உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும் ஒரு கோயிலாக வளர்ச்சி கண்டது.

ஸ்ரீபுவனேஸ்வரி அன்னையை இப்படி ஆராதித்து வழிபட்ட மக்கள் மத்தியில் அவளது புதுமையும், தெய்வீகச்சிறப்பும் உணரப்பட்டு உரித்துடைய பக்தி என்கின்ற நிலையில் வைத்து அன்னையிடம் தங்கள் குறை நிறைகளை எடுத்துக்கூறி ஆறுதலும் அதன் வழி அருளும் பெற்று இக் கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

அருள் தரும் அன்னைக்கு நாம் என்ன செய்தோம் ? எனச் சிந்தித்த மனங்கள் அனைத்தும் சிந்தையில் ஒன்றாகி அழகு ஆலயம் அமைக்க அவள் அருளை வேண்டி நின்றனர். இப்பகுதி மக்கள் கடின உழைப்பாளிகளாக விளங்கினும் "உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே" என்ற உபதேச வாக்கிற்கமைய தமக்கு வாழ்வளித்த அன்னைக்கு நன்றிப்பெருக்குடன் இந்திய சிற்பாசாரியார்களின் வழிகாட்டலில் இக்கிராம மக்கள் அனைவரும் ஒன்று கூடி அல்லும் பகலும் அயராது உழைத்துத் தாமே இப்பெருங்கோயிலைக் கட்டிமுடித்தனர் என்பதும் வரலாற்றில் பதியப்பட வேண்டிய சம்பவமாகும்.

அனைத்து அடியார்களின் சரீர உதவியும், இடம் பெயர்ந்து பிறதேசத்தில் வாழ்ந்தாலும் அன்னை மீது அன்பு கொண்ட பக்தர்களின் பெருநிதியுதவியும் கொண்டுதான்இப் பெருங் கோயில் கட்டி யெழுப்பப்பட்டது. ஒரு புறத்தே பச்சைப் பசேல் என்ற தோட்டங்களும்மறு புறத்தே பக்திப் பரவசங்கொண்ட பக்தர்களின் குடிமனைகளும் அமைந்த இப்புண்ணிய ஸ்ரீபாரதிபுரம் புவனேஸ்வரி அருள் ஆட்சியில் இணையில்லாச் செல்வங்களுடன் பொலிவுற்று விளங்குகின்றது. வானுயர் கலசங்களும், வளைந்த வில்லு மண்டபங்களும், முனிவரும் தேவரும் வந்தமர்ந்த வனப்பு மிகு தூபிகளும் அரியும் பரியும் அணைத்தோங்க நிலைத்த நீண்ட தூண்களும் வளைந்த வன்பொதிகளும், சுந்தரமிகு சுதைகளும், வானவில்லின் வண்ணக் கலவை வர்ணங்களும் கொண்டு அமைந்த இத்திருக் கோயிலின் தேவ சிற்பங்கள் அனைத்தும் இந்தியா திருவாவடு துறையில் இருந்து புகழ்மிகு கலைஞர்களின் கலைமிகு கரங்களால் வடிவமைக்கப்பட்டு பெருமுயற்சியால் இங்கு தருவிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

எண் குணங்களும் எண் மூர்த்தமும் கொண்டவன் இறைவன் என வேத ஆகமங்களும் திராவிட துதிகளும் போற்றுகின்றன. அப்படிப்பட்ட இறைவனின் சக்தியை ஈஸ்வரி, பரமேஸ்வரி, சுந்தரேஸ்வரி, இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, அகிலாண்டேஸ்வரி, பத்மேஸ்வரி, புவனேஸ்வரி எனப்பல திருவடிவங்களுக்குப் பற்பல நாமங்களை இட்டு அழைக்கின்றனர்.

இப்படிப்பட்ட இறைவிக்கு வேதமுணர்ந்த சிவாச்சாரியார்கள் பதினேழு குண்டங்கள் அமைத்து அதில் அஷ்ட மூர்த்தங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் இத்துடன் சூரிய சந்திரர், எஜமான் என்பவற்றுடன் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனையும் பூஜித்து இக் கும்பாபிஷேகத்தை நிகழ்த்துவது தனிச்சிறப்பாகும்.

அத்தருணம், அறவோரும், அடியாரும் அன்னையின் புகழ்பாட, கலைஞரும், கவிஞரும் அன்னைக்குத் துதிபாட, சங்கு மங்கள கெண்டி முழங்க முப்பத்து முக்கோடி தேவரும் வானில் பூமாரி சொரிய புவனேஸ்வரி திருமேனியில் பெருஞ்சாந்தி குடமுழுக்கு புண்ணியநீர் புரந்தோடும் இந்தக்கும்பாபிஷேக விழாவை நினைத்து, கேட்டு, பார்த்து பரவசமடைந்து வழிபாடியற்றி வாழ்விலே சகல சம்பத்துக்களுடனும் நாம் வாழ திருவருள் துணை நிற்கட்டும். ஸ்ரீ புவனேஸ்வரி அன்னையின் குடமுழுக்குப்பெருஞ்சாந்தி விழாவுக்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து ஜீவாத்மாக்களுக்கும் அருள் நிறைந்த பெருவாழ்வு கிடைப்பதாக.

தித்திக்கும் மொழியால் சோபித்த தேவி போற்றி
பக்தியின் பரவசத்தில் சிவபிரான் பாதியே போற்றி
முக்திக்கு வழியாய் நின்ற முக்கனியே போற்றி
பாரதி புரமாளும் எங்கள் புவனேஸ்வரியே போற்றி

-இணுவில் சர்மா.



## கமலபதத் துணைபுரிவாய்

சீருடைய சோலைவளம் திகழும்கோண் டாவிலிலே
பாரதி புரத்துறையும் புவனேஸ் வரித்தாயே
தங்குகின்ற பார்த்திபத்தில் சார்ஆனி உத்தரத்தில்
பொங்குகுட முழுக்கேற்ற புவனேஸ் வரித்தாயே

பாரெல்லாம் பசிதீர்க்கும் பார்வதியே ஆதிசக்தி
தீராத வினைதீர்க்கும் புவனேஸ் வரித்தாயே
அலங்காரக் கோயிலிலே அமர்ந்திருக்கும் ஆத்தாவே
கலங்கா தெமைக்காப்பாய்புவனேஸ் வரித்தாயே

கோயிலினைக் கட்டியவர் கோலங்கள் செய்தவர்கள்
நேயமிகும் அடியார்கள் நிதிதந்த புண்ணியர்கள்
ஆயவிதிப் பூசனைகள் ஆற்றுமுயர் அந்தணர்கள்
தூயசுகம் சந்தானம் தொழில் செழிக்க வாழவைப்பாய்

அன்பிலுரு வானவளே அகிலாண்ட நாயகியே
பொன்பொலியும் முகத்தாளே புவனேஸ் வரித்தாயே
வறுமையிலே வாடாமல் மனமுடைந்து வேகாமல்
அறநெறியில் வாழவைப்பாய் புவனேஸ் வரித்தாயே

பொய்களவு சூதுகொலை புரியாத நல்வாழ்வு
மெய்விளங்க வைத்திடுவாய் புவனேஸ் வரித்தாயே
தமிழினத்தின் நலம்பெருக சமாதான சுகம் பெருக
கமலபதத் துணைபுரிவாய் புவனேஸ் வரித்தாயே

**அருட்கவி சீ.விநாசித்தம்பி**

## பிரதிஷ்டா குருவின் ஆசியுரை

கோண்டாவில் பாரதிபுரத்தில் புதிதாகக்கட்டப்பட்ட திருவருள் மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று (13.07.2005) புதன்கிழமை காலை ஆருத்திரா தரிசனத்தில் எம்பெருமாட்டிக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த இந்த ஆலயத்தில் இருந்து அம்பாள் திருவருள் பாலிக்கின்றார். இந்த ஆலயம் சிறப்பாய் வர இவ்வூர்மக்கள், கொடை வள்ளல்கள், இளைஞர்கள் எல்லாவழிகளிலும் பாடுபட்டு இந்த ஆலயத்தை புதுப் பொலிவுடன் உருவாக்கியவர்கள். இன்னமும் இந்த ஆலயத்திற்கு உதவி செய்ய நினைப்பவர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல அகில போகத்தையும் அண்ட சராசரங்களையும் வழி நடத்துகின்ற அன்னை புவனேஸ்வரி எல்லா நலன்களையும் கொடுத்து வேண்டி வருபவர்களுக்கு வேண்டும் வரங்களைக் கொடுத்து அருள் புரிவராக என்று அம்பாளை வேண்டி நிற்போமாக.

*லோகா சமஸ்தா சுகினோபவந்து*

ச.சிறீஸ்கந்தராஜா குருக்கள்
பிரதிஷ்டா குரு.

## அன்னை புவனேஸ்வரி அம்பாளுக்கு ஒரு பெருவிழா

இலங்கையின் சிகரமாக விளங்கும் யாழ்.குடாநாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள கோண்டாவில் கிராமத்தில் பல கோயில்கள் மத்தியில் அமைந்துள்ள புவனேஸ்வரி அம்பாள் இசைக் கலைஞர்களுக்கும் கவிஞர்களுக்கும், கல்விமான்களுக்கும், வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் அருள்பாலித்து கொண்டிருக்கிறாள்.

மனிதபுலன்களால் கிரகிக்கமுடியாத எம்பெருமாட்டியை எமது புலன்கள் கிரகிக்கக் கூடியதாக எம்மீது இரங்கி திருவருள்பாலிக்கும் முறையை இறைவனால் அருளப்பட்ட உபநிடதங்கள் எடுத்துக்கூறுகின்றன. இதனைத் துணைக்கொண்டு வகுக்கப்பெற்றது தான் கும்பாபிஷேகக் கிரியைகள். இக்கிரியைகள் இயற்கையின் கட்டமைப்புகளாகிய நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு ஆகிய பஞ்சபூதங்களைக் குறித்து நிற்கின்றன.

இக்கோயிலின் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக விமானங்கள், சுற்றுப்பிரகாரம், வசந்தமண்டபம் யாவும் ஓவிய அலங்காரமாய் விளங்குகின்றன.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் எனக்கூறப்படுகின்ற குடமுழுக்கு விழா சர்வலோக நாயகியாகிய புவனேஸ்வரி அம்பாளுக்கு எடுக்கப்படும் விழா. கோண்டாவில் வாழ் மக்களுக்கு பேரானந்தப் பெருவிழாவாகும்.

இப்பணியை நிறைவுசெய்துள்ள திருப்பணிச் சபையினரையும், பாரதிபுர மக்களையும் ஆலய சிவாச்சாரிய பெருமகனாரும் இன்று (13.07.2005) புதன்கிழமை குடமுழுக்கு விழாவை மேற்கொள்கின்றனர். மனித வாழ்விலே இனிய தெய்வீக பெருவிழாவாக அனைவரும் வணங்கி அன்னையின் அருளைப் பெறுவோமாக.

**க.முருகையா**
கிராம அலுவலர் (J/115),
கோண்டாவில் வடமேற்கு.

## கோண்டாவில் ஸ்ரீ பாரதிபுரத்திலிருந்து ஆண்டருள் செய்யும் அன்னைக்கு கும்பாபிஷேகம்

வானளாவியகோபுரங்கள் மனிதனின் எண்ணங்களையும் செயல்களையும் உன்னத நிலைக்கு உயர்த்தும் வழிகாட்டிகளாக தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகின்றன. அன்பையும் பண்பையும் வளர்த்து சமுதாயத்திற்குத் தொண்டுசெய்து ஒவ்வொரு தனி மனிதனும் தன்னையும் உயர்த்திக்கொண்டு சமுதாயத்தையும் உயர்த்த ஆலயங்கள் பெரிதும் உதவுகின்றன.

கோயிலைச் சார்ந்த குடிகள் - குடிகளைச் சார்ந்த கோயில் என்ற நாகரிகத்திற்கும் பாரம்பரியத்திற்கும் நாம் பழக்கப்பட்டவர்கள் ஆன்மீகப் பெரியோர்கள் பெருமளவில் தோன்றி மக்கள் நன்நெறியில் வாழ வழிவகுத்தனர். இந்த வகையில் எமது கிராமத்தில் புவனேஸ்வரி அம்பாளுக்கு அழகிய திருக்கோயிலை அமைப்பதற்கு அம்பாள் எம்மை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறாள்.

அவளிட்ட ஆணையால் ஆலயம் அமைக்கப்பட்டுவிட்டது. இன்று அவளின் ஆலயத்திற்கு குடநீராட்டு நடைபெறுகின்றது. இந்தப் புனித திருப்பணியில் பலரை அம்பாள் இணைத்திருக்கிறாள். எங்கள் கிராமம் இன்று புதுப்பொலிவு பெற்றிருக்கின்றது. அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம் என்பதற்கிணங்க அவளருளை பெற அவள்தாள் பணிவோம்.

**திரு.பொ.சிவராஜா** தலைவர், ஆலய பரிபாலனசபை, புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், கோண்டாவில் மேற்கு.

## விழா சிறப்புற வாழ்த்துவோர்:


வீடியோ படப்பிடிப்பு
முத்தொளி
டிஜிற்றல் படப்பிடிப்பு
தலைமையகம்:
கோண்டாவில்,தில்லையம்பதி
T.P.:021-2225491
கிளை:
குளப்பிட்டிச்சந்தி,கொக்குவில்
T.P.:0777110116

இன்ரநெற் புறோசிங்
கொம்பியூட்டர் கேம்ஸ்
இன்ரநெற் மூலம்
வெளிநாட்டு அழைப்பு
மற்றும் CD Writing
eCyyber Net Cafe
ஈ.சைபர் நெற் கபே
கே.கே.எஸ்.றோட், உப்புமடச் சந்தி, கோண்டாவில் மேற்கு.
T.P.:0773126960, 0777 222 519

கோயில் விக்கிரகங்கள் உற்பத்தியாளர்கள்.
பஞ்சலோக விக்கிரகங்கள் ஓடரின்பேரில்
மிகச்சிறந்தமுறையில் செய்துகொடுப்பவர்கள்.
கலையரசி
23/01, விவேகானந்தாமேடு
கொழும்பு-13.
T.P.: 011 2478885

S.L.S.
கல்லுடைக்கும் ஆலை
டிப்போ வீதி,
கோண்டாவில்.
T.P.: 0776150662

கோகுலம்
கல்லுடைக்கும் ஆலை
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.
T.P.:0777049186

போட்டோ சொலக்ற்
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில் மேற்கு.
T.P.:0777421139

கிருஷ்ணா
தச்சுத் தொழிற்சாலை
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய பந்தல், மணவறை, கதிரை, சோடனைப் பொருள்களுக்குநாடுங்கள்
ஜெயம் அலங்காரப் பந்தல்
நந்தாவில் அம்மன்கோயில்,
கோண்டாவில்

ஸ்ரீ அம்பாள்
கோயில் கட்டடக்கலை,
சிற்பக்கலை,வர்ணவேலைகள்
ஒப்பந்தகாரர்
R.இளங்கோ
திருவாரூர், தமிழ்நாடு,
இந்தியா.
T.P.:0091-4366233604,0776741288.
S.சூரியகுமாரன்
பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு
T.P.:0776032107.

பெஷன் ஸ்ரார் ரெயிலர்
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில்.
T.P.:0773248970

ஜிப்ஸ் வீடியோ படப்பிடிப்பாளர்கள்
◆ அதிநவீன தொழில் நுட்பம்
◆ கமரா கையாளும் விற்பன்னர்கள்
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில்.
T.P.:0776098007,
0776030760

இணுவில்
தச்சுத் தொழிற்சாலை
+
மர அரிவு ஆலை
தியேட்டர் வீதி,
இணுவில்.

சிவம் ரெக்ஸ்ரைல்
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில்.

கட்டடவேலைகளுக்குத் தேவையானசீற்,ஓடு,
கம்பிகள்,பெயின்ற்வகைகள்,
மின்சாரப்பொருள்கள்,சீமெந்து,
எஸ்லோன் குழாய்கள்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்
சக்திவேல் ஹாட்வெயர்
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில மேற்கு.

விதுஷா சுப்பமார்கற்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

College of Computer
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.
(37590)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## பொறுமையின் எல்லையை நோக்கி...

நிராயுதபாணிகளாக அரசியல் பணியாற்றச் சென்ற தமது போராளிகள் மீது திருகோணமலை உப்புவெளிப் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீற்றம் கொள்ளவைத்திருக்கின்றது. இந்தத் தாக்குதலைக் கண்டித்தும், ஆட்சேபம் தெரிவித்தும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் புலிகளின் சீற்றம் தெட்டத் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது.

*'அண்மைய நாள்களில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபட்டுவரும் எமது போராளிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. தற்போதுள்ள குழப்பமான சூழ்நிலையில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவது போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத்தன்மைக்கே பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் அச்சமும் குழப்பமும் ஏற்பட்டுள்ளன.*

*'எமது போராளிகளும் மக்களும் தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொல்லப்படுவதையும் அச்சுறுதலுக்கு உள்ளாக்கப்படுவதையும் நாமோ, எமது மக்களோ தொடர்ந்தும் பார்த்துக்கொண்டு பொறுமை காப்பது சாத்தியமற்றது. போர்நிறுத்தச் சூழலைக் குலைத்து, போர்நிறுத்த உடன்பாட்டை முறித்துக்கொண்டு மீண்டும் ஒரு போர்ச் சூழலை எமது தேசத்தின் மீது திணிப்பதற்கான முழுமையான முயற்சிகளையே இலங்கை அரசும் படைத்தரப்பும் எடுக்க முயல்கின்றனவோ எனத் தோன்றுகிறது. ஏனெனில், கடந்த காலங்களில் பலமுறை நாம் இதுபோன்ற நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டியிருந்தும் எச்சரித்திருந்தும் அவை உதாசீனப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் எம்மீதும், எமது மக்கள் மீதும் கொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு ஒரு நிழல் யுத்தம் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு இக்கட்டத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்க்கமானதும் உறுதியானதுமான முடிவுகளை எடுக்கவேண்டும்'* - என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

போராளிகள், பொதுமக்கள் என நான்கு பேர் மோசமான முறையில் கொல்லப்பட்டதால் எழுந்த வெறும் கோபத்தின் - சீற்றத்தின் - விளைவாக எழுதப்பட்டதாக இந்தக் கடிதத்தை தென்னிலங்கை கருதி ஒதுக்கிவிடக்கூடாது.

மூன்றரை வருட யுத்தநிறுத்தத்தின் பெறுபேறாக - பயனாக - விளைவாக - ஏதும் கிடைக்காமல் அரசியல் வெறுமையின் விளிம்பில் - விரக்தியின் உச்சத்தில் - நின்றுகொண்டு விடுதலைப் புலிகள் தெரிவிக்கும் இறுதி எச்சரிக்கையாகக் கொள்ளப்படவேண்டியது இக்கடிதம்.

கடந்த வருடம் நவம்பம் 27ஆம் திகதி தனது வருடாந்த மாவீரர் தின உரையில், தமது இயக்கத்தின் கொள்கைக் கோட்பாட்டு விளக்கத்தை வழமைபோல் வெளியிட்ட தலைவர் பிரபாகரன், பொறுமையின் எல்லையில் புலிகள் இருப்பதை தெளிவுபடுத்தியிருந்தார். எனினும், அதற்குப் பின்னர் இலங்கை முழுவதையும் தாக்கிய ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகத் தமது பொறுமையை மேலும் நீடித்து பொறுப்புக் காக்கவேண்டியவரானார் அவர். அந்தப் பொறுமையை மேலும் சீண்டிப் பார்க்கும் செயல்கள் தாம் இப்போது தமிழர் தாயகத்தில் அடிக்கடி அரங்கேறுகின்றன.

மூன்று தசாப்த காலம் முடிவின்றித் தொடர்ந்த போருக்கு ஓய்வுகொடுத்து மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன.

இரண்டும் கெட்டான் நிலையில் விடிவின்றி, எதிர்கால சுபீட்சமின்றி, சூனிய அரசியல் இருட்டுக்குள் தமிழினம் தொடர்ந்தும் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி அரசியல் வெறுமைக்குள் தமிழினம் தொடர்ந்தும் இப்படி அல்லாட முடியாது.

அமைதி முயற்சிகள் மட்டுமல்ல, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான எத்தனங்கள் கூட வெறும் வீண் விரய விவகாரமாகி தமிழினம் விசனத்தின் விளிம்பில் நிற்கிறது.

அந்தச் சமயத்தில்தான் இத்தகைய ஆத்திரமூட்டும் - போராளிகள் மற்றும் பொதுமக்களின் உயிருடன் விளையாடும் - வேண்டத்தகாத - விபரீத - சம்பவங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

அதுவும் இவை எல்லாம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதமின்றி அரசியல் பணியில் ஈடுபடுகின்ற போராளிகள் மீதுதான் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இவ்வாறு இடம்பெறும் சம்பவங்களின் அரசியல் சூழ்நிலைகளும், நேரம், இடம், காலம், முறை போன்றவையும் இவற்றி[ன்] உள்நோக்கத்தைத் துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றன.

போராளிகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அங் கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெறும் உதிரி நிகழ்வு களாகக் கருதி அரசுத் தரப்பு வாளாவிருக்குமானால் அதன் விளைவு மோசமாகலாம்.

கண்காணிப்புக் குழுவுக்கு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுட்டிக் காட்டியுள்ள அம்சங்களின் ஆழ, அகல, அர்த்த பரிமாணங்களை அரசுத் தரப்பு புரிந்துகொள்ளத் தவறுமானால், அது யுத்தத்துக்கு முடிவு கட்டிய இந்த மூன்றரை வருடகால ஓய்வு நிலைக்கும் முடிவு கட்டியதான நிலையையே ஏற்படுத்தலாம்.

அரச படைகளும், புனலாய்வுப் பிரிவும் தறிகெட்டு செயற்படுவதால் நிகழும் இத்தகைய விபரீதங்களைக் கட்டுப்படுத்தாமல் அரசுத் தலைமை தனது மெத்தனப் போக்கைத் தொடருமானால் -

அல்லது, இத்தகைய விபரீத செயற்பாடுகளை அங்கீகரித்துப் பார்த்துக் கொண்டு அரசுத் தரப்பு வாளாவிருக்குமானால் -

பொறுமையின் எல்லையைப் புலிகள் தாண்டும் மோசமான நிலைமை ஏற்படலாம். அதன் பின்னர் சுதாகரித்து சமாளிக்க முயல்வது 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதையாகவே' இருக்கும்.

# ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடாவடிகளை இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!

## திருமலைச் சம்பவம் குறித்து பல்கலை. மாணவர் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை13

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் போராளிகளையும் பொதுமக்களையும் பெருமளவில் கொன்று குவித்து வருகின்றனர்.

படையினரின் இந்த அடாவடித் தனங்களை இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. திருகோணமலையில் போராளிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டிருக்கின்ற கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலில் லெப்டினன்ட் கேணல் டிக்கான் உட்பட நால்வர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இது ஓர் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். போராளிகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த, தமிழ் மக்களால் காலக்கெடு விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவமும் அதன் அடிவருடிகளாக செயற்படுகின்ற ஏனைய ஆயுதம் தாங்கிய குழுக்களும் எவ்வித ஆயுதமுமின்றி மக்களுக்காக வாழ்ந்து மக்களுக்காக பணி புரிந்து கொண்டிருப்பவர்களை திட்டமிட்டுக் கொலை செய்திருப்பது சமாதானச் செயற்பாடுகளில் பற்றுறுதியுடன் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை வலிந்து போருக்கு இழுக்கும் செயற்பாடாக இருக்கின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் இன்று வரை பல தமிழ் மக்களையும் போராளிகளையும் கொன்று குவித்துவரும் சிங்கள இராணுவத்தின் செயற்பாடுகளை நாம் வீணே பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. இந்த நிலையில் தனியே போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் மட்டும் முறைப்பாடு செய்து கொண்டிருப்பதைவிட்டு எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் தக்க பாதுகாப்பை நீங்களே வழங்க வேண்டுமேன மேன்மை தங்கிய தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வேண்டிநிற்கின்றோம்.

அத்தோடு இச் சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களுக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(த)

# வல்வை.நகர தொழிலாளருக்கு திக்கத்தில் 35 நிரந்தர வீடுகள்

கரவெட்டி,ஜூலை13

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற வல்வை நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கென திக்கத்தில் 35 நிரந்தர வீடுகள் அமைக்கப்படுகின்றன.

ஜேர்மன் நாட்டு நிறுவனம் ஒன்றும் இலங்கை மெதடிஸ்த திருச்சபையும் இணைந்து மேற்படி வீடுகளை அமைத்துக் கொடுக்கின்றன.

ஒவ்வொரு வீடுகளும் 550 சதுர அடிகளைக்கொண்ட சுற்றளவில் இரு அறைகள், ஒருஹோல், சமையல் அறை, மலசலகூடம் என்பவற்றைக் கொண்டிருக்கின்றன.

நீர் விநியோகக் குழாய்களும் அமைக்கப்படுகின்றன.

பாரிய தண்ணீர் தாங்கி ஒன்றும் சன சமூக நிலையம், பாலர் பாடசாலை என்பனவும் அங்கு அமைக்கப்படுகின்றன.

கட்டட வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. மேற்படி வீடுகள் அனைத்தும் மூன்று மாதங்களில் பூர்த்தியாக்கப்பட்டு விடும் எனவும் - வல்வை நகர சுத்திகரிப்புத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வைபவ ரீதியாக வழங்கப்படும் என்றும் இத்திட்ட நிர்மாண உத்தியோகத்தர் யேன்ஸ் பொக்கில் அகிடோக்ட்டும் திட்டப் பொறுப்பாளர் நிருபன் முத்தையா கொன்சல்டனும் தெரிவித்தனர். (த-70)



திக்கத்தில்அமைக்கப்பட்டு வரும் வீடுகளைப் படத்தில் காணலாம்.

(படங்கள்: சி.சுந்தரலிங்கம்)

# நல்லூர், கல்வியங்காடு, கோப்பாயில் இரவு நேரத்தில் சீரற்ற மின்விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

நல்லூர், கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் கடந்த சில நாள்களாக இரவு நேரத்தில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

முன்னிரவு வேளைகளில் அடிக்கடி துண்டிக்கப்படும் மின்சாரம், பின்னிரவு நேரங்களில் முற்றாகத் தடைப்பட்டுப் போய்விடுகின்றது. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலத்திரனியல் சாதனங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்ற இன்றைய சூழ்நிலையில் மின்சாரம் துண்டிக்கப்படுவதால் வீடுகளில் மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி உள்ளது.

மருத்துவமனை போன்ற பொது இடங்களிலுள்ள பொதுமக்களும் இரவில் வீதிகளில் பயணிப்போரும் பலவித இடர்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

(த-7-72)

ஆனி 29
வியாழக்கிழமை
14.07.2005
திதி: அட்டமி
பின்னிரவு 4.31 வரை
நட்சத்திரம்: அத்தம்
முற்பகல் 8.02 வரை
சுபநேரம்: 07.30 - 9.00
ராகுகாலம்: 01.30- 3.00
(யாவும் பழைய நேரப்படி)

# அம்பன் அரசினர் மருந்தகத்தை மீள இயங்க வைக்க நடவடிக்கை

வடமராட்சி,ஜூலை13

வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் அரசினர் மத்திய மருந்தகம் 'நிகொட்' திட்டத்தின் கீழ் 57 இலட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் நாகர்கோயில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அதன் எல்லைப் பகுதியில் இருந்து வரும் இவ் வைத்தியசாலையை இயங்க வைப்பதற்கென படையினரால் ஒரு வருடத்திற்கு முன்னர் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

வைத்தியசாலை சேதமடைந்திருந்தால்அதனைத் திருத்தியமைத்த பின்னர் இயங்க வைப்பதென பிராந்திய சுகாதாரத் திணைக்களம் முடிவு செய்திருந்தது.

தற்போது 'நிகொட்' திட்டத்தின் கீழ் நிதி கிடைத்ததைத் தொடர்ந்து திருத்தும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

முற்று முழுதாக திருத்தியமைக்கப்பட்டதும் இவ் வைத்தியசாலையை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார். (த-173)





# மிருசுவில் துர்க்காபுரம் படித்த மகளிர் திட்டம் ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

**13.07.2005 - 22.07.2005**

**ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் அடியார்களே!**

ஷி ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆனி 29ஆம் நாள் (13-07-2005) புதன்கிழமை ஆரம்பமாகி ஆடி 6ஆம் நாள் (22-07-2005) வெள்ளிக்கிழமை இறுதிநாள் தீர்த்தோற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறுவதற்கு அம்பிகை திருவருள் பாலித்துள்ளார்.

9ஆம் நாள் விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கா தேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியின் திருவீதியுலாவுடன் சேர்ந்து வீதியுலா வருகின்ற அருட்காட்சியும் இடம்பெறும்.

தினந்தோறும் காலை 10 மணிமுதல் ஸ்நபன அபிசேகம், பூசை, திருவிழா என்பவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலாவும் நடைபெறும்.

☞ அடியார்கள் அனைவரும் இவ்விழாவிற் பங்குகொண்டு, எல்லாம்வல்ல ஸ்ரீஞானதுர்க்கா அம்பாளின் பத்மபூஷண பாதார விந்தங்களைத் தொழுது திருவருள் பெற்றுப் பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

"இறைபணியே இன்பப் பணி"

மிருசுவில் துர்க்காபுரம் ப.ம. திட்டம்,
பரிபாலனசபையினர். (37624) (24-16-15)

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு. சி.நவரத்தினஐயா.

## பாதீனியம் அழிப்பு

கோப்பாய்,ஜூலை13

கோப்பாய்ப் பிரதேசத்தில் பரவலாகக் காணப்பட்ட பாதீனியக் களைகள் கோப்பாய் மத்தி கிராம அலுவலர் ஜோசப் இரட்ணராஜா தலைமையில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின்மூலம் சிரமதான அடிப்படையில் பிடுங்கி எரியூட்டி அழிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பாதீனியம் எதிர்காலத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தில் பரவும் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

(த-72)


## Spacious House to let


A Spacious luxury situated at Temple Road (Opposite the Save the Children fund office) is available for Rent.N.G.O.S are preferred. Facilities include annexed toilets, Car Park space and a flower garden.

Please contact T.P.Nos.0777-732364 & 077-3013672.

V.P.Paramalingam,
375/1, Temple Road,
Nallur.

(37633) (32-24)


## மூன்றாவது வருட நினைவஞ்சலி



தோற்றம் 05 - 06 - 1941

மறைவு 13 - 07 - 2002

**அமரர் கந்தையா இராஜரட்ணம்**

வாழ்வில் எம்மை அன்புடன் நேசித்தீர்
மூன்றாவது வருட நினைவு நாளில்
உம்மை அன்புடன் இன்று நினைவு கூருகின்றோம்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (37655) (39-24-16-15)

மருமக்கள்.


## 2005 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறிகள்

SCC

அனைத்துப் பயிற்சி நெறிகளிற்கும் 50% கட்டணச் சலுகை

**DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003** — Duration 5 Months — Course Fees Rs. 875/=

- Fundamentals of Information Technology • Word • Excel • MS Money • Access • Power Point • Internet, E-mail

**DIPLOMA IN DESKTOP PUBLISHING** — Duration 4 Months — Course Fees Rs. 1375/=

- Word • Power Point • Pagemaker • Corel Draw • Photoshop

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING** — Duration 8 Months — Course Fees Rs. 2800/=

- Information Technology • SAD • Visual C++ (System, Bios, Memory, Disk, Network Programming) • Visual Basic • Protocol Builds-up • Visual FoxPro • Oracle • Java • Internet, Interfacing Programming.

**DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING** — Duration 4-5 Months — Course Fees Rs. 1800/=

Electronics fundamentals, digital Electronics fundamentals, DE to IT formulation, DE in Hardware computer function and components component level servicing, trouble shooting and fixing, various troubles and shooting Board level trouble shoot and servicing various casingtypes, Mother board types and SMPS types. Various OS types, OS preparation and installations, Hard disk portioning & file systems, Windows 98 and Windows XP variety installations DOS internal and external command. Software and Antivirus installations preparation of Rescue disk, How to Rescue an affected system regular most problems and Trouble shoots various Bios and setup turned-up modem configuration, Internet setup, Email setup & configuration

**DIPLOMA IN NETWORK ENGINEERING** — Duration 4 Months — Course Fees Rs. 2850/=

**DIPLOMA IN VISUAL BASIC** — Duration 4 Months

**DIPLOMA IN COMPUTER SCIENCE** — Duration 6 Months

**DIPLOMA IN AUTOCAD** — Duration 4 Months

**DIPLOMA IN C++** — Duration 4 Months

Course Fees Rs. 1375/=

பிரிவு III ஆரம்பம் 16,18.07.2005

உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

மேலுள்ள பயிற்சி நெறிகளில் ஒன்றைத் தொடரும் மாணவர்கள் கீழுள்ள பயிற்சி நெறியை இலவசமாக கற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

**DIPLOMA IN INTERNET E-MAIL** — Duration 2 Months

**Softview Computer College**


(Authorised Councelling Centre for Queen's Park College, London. A Joint Venture with Arom Menporulagam Ltd., India.)

www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.

T.P: 021 2225170,
0777846811

scclanka@hotmail.com
Arya Gowdar Road,
West mambalam Road,
Chennai 600 033, India.


## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



மலர்வு 07 - 08 - 1937

உதிர்வு 14 - 06 - 2005

**அமரர் கந்தையா செல்லையா (பிறதர்)**

எமது குடும்பத்தலைவர் அவர்களின் சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் நாளை (14.07.2005) வியாழக்கிழமை முற்பகலில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் பண்ணை,
இல.03, கனகபுரம்,
கிளிநொச்சி. (சி/42018) (32-15-16-24)

- மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 - 07 - 1982

மறைவு 13 - 07 - 2000

**அமரர் சோமசுந்தரம் சஞ்ஜீவன்**

(யாழ். இந்துக் கல்லூரி A|L கணித மாணவன்)

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உங்கள்
நினைவுத் துயர் எம்மை விட்டுப் பிரியாது.

1229/6, பூநாறி லேன்,
கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(37649) (39-24-16-15)

## சிப்பாய் விடுதலை

இயக்கச்சி இராணுவ முகாமில் 2003ஆம் ஆண்டு சக சிப்பாய் ஒருவரைச் சுட்டுக்கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அதே இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ். மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 2003ஆம் ஆண்டு கடமையிலிருந்த சக இராணுவ வீரரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நலகமாலாஹேமபால என்பவருக்கு எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் நடைபெற்றது.

விசாரணைகளை [illegible] நீதி விசாரணை மு[illegible] சாட்சிகளில் [illegible] தெரிவித்து [illegible] தீர்ப்பளித்த[illegible]

இந்த வ[illegible] வாதி செல்[illegible] பில் சட்டத்[illegible] யிருந்தனர்[illegible]

## நி[illegible]யுதவி

யாழ்ப்பாணம்,ஜூலை13

இலங்கையிலுள்ள இந்து சிறுவர் இல்லங்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு நிதியுதவி வழங்கியுள்ளதாகவும் -

இதன் கீழ் யாழ்.சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துக்கு ஐந்து லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் -

அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-202)

## 3ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவுகள்



உதயம் 21 - 09 - 1921

அஸ்தமனம் 15 - 06 - 2002

**[illegible]மரர் கண்மணியம்மா அருணாசலம்**

திதி: 13-07-2005

*சிந்தையில் மகிழ்ந்து தேன்போல் தித்தித்து - நாளும்*
*உங்கள் மென்மைக் குணத்தால் - மேதினியில் - திகழ்ந்து*
*பாசமும் நேசமும் கொண்டு பண்புடனே - விளங்கி*
*பந்தங்களின் சுகமதை நினைத்து - வாசமலர்களாய் - வாழ்ந்தீர்*
*சான்றோராய் வாழ்ந்து - எம்மையும் வாழ்வித்தீர்*
*ஆண்டாண்டு காலமாய் உம் பாதம் பணிகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்கள் நினைவில் வாழும்:

689, பருத்தித்துறை வீதி.
நல்லூர்.
(37656) (42-24-16-15)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# தரம் உயர்ந்த கல்வியை உருவாக்கிப் பேணுவது இலங்கைக்குப் பெரும் சவாலாகி உள்ளது

## உலக வங்கியின் அறிக்கையில் தகவல்

தரம் உயர்ந்த கல்வி முறையை உருவாக்குவதிலும் தொடர்ந்து பேணுவதிலும் இலங்கையின் கல்விக் கொள்கைகளை வகுப்பவர்கள் கடுஞ் சவாலை எதிர்நோக்கி உள்ளனர்.

இலங்கையின் கல்வி நடைமுறையின் சிறப்புக்கள்; தளராத முயற்சி; வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்; மற்றும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளல் - என்ற தலைப்பில் உலக வங்கியினால் கடந்தவராம் கொழும்பில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த வருமானமுடைய பொருளாதார நிலை இலங்கையில் நிலவிவருகின்றபோதிலும், ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி நடைமுறைகள் இந்நாட்டில் திருப்திகரமான வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வு அறிக்கை வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றிய உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரல்ட்:-

இலங்கை மக்கள் பொதுவாகவே தமது தேவைகளில் மற்றெல்லாவற்றையும்விட கல்விக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்பட்டு வருகின்றனர். வறிய மற்றும் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், இடையில் கல்வித்தரத்தில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சியை மீண்டும் உயர்த்திக்கொள்ள இயலும் - என்று கருத்துவெளியிட்டார்.

குறிப்பிட்ட ஆய்வறிக்கையில் இலங்கையின் கல்வித்தரம் தொடர்பாக உள்ளகத் திறமை, தரமான சேவை வழங்கல், எதிர்நோக்கும் சவால்கள் ஆகிய பலகோண ஆய்வு விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பக் கல்வி, தொழில்சார் கல்வி ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும், கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் உலக வங்கியின் பிரதிநிதி தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்ய உலக வங்கி கடந்த பல காலமாக உதவிவருகின்றது. ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா உட்பட வேறு பல வெளிநாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வித் திட்டங்களுக்குச் சமமானதொரு கல்வித்திட்டம் இந்நாட்டிலும் கைக்கொள்ளப்படுமானால், அது இலங்கையின் கல்வி அபிவிருத்திக்கு உதவுவதாக அமையும் - என்றும் பீற்றர் ஹரோல்ட் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் சிரேஷ்ட பொருளாதார நிபுணரான ஹார்ஷா அதுருபான ஆய்வு அறிக்கையை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில்:-

கல்வி நடவடிக்கைகளுக்காக அரசினால் வருடா வருடம் வரவு - செலவுத்திட்டத்தில் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டு வந்த போதிலும், அந்நிதி உரிய முகாமைத்துமும் திட்டமிடலும் இன்மையால் முழு அளவில் பயன்படுத்த இயலாது போய் விடுகின்றது.

வகுப்பறைகளை நவீனமுறையில் திருத்தி அமைத்தல், விஞ்ஞான ஆய்வுகூட வசதி, கணனி நிலையங்கள், நூலகவசதி மற்றும் செயற்பாட்டு இடவசதி என அவசியமான வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி நடவடிக்கைகளில் இத்தகைய புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தற்போது இக்கல்வித் திட்டத்திலுள்ள பின்னடைவுகளை மாற்றி அமைக்க முடியும்.

உலகவங்கி 2006 - 2010ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு இலங்கையில் கல்வித்துறை அபிவிருத்திக்கென 60 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கியுள்ளது. அதுமட்டுமன்றி, கடந்த 10 ஆண்டுகள் காலத்தின் நாட்டின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென 200மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதியை உலக வங்கி செலவிட்டுள்ளது- என்று அவர் தெரிவித்தார்.

(அ-205)

# நல்லொழுக்க கட்டுப்பாட்டு விதிமுறைகள் பாடசாலைகளில் மீண்டும் அமுலாகுமா?

*"ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது உயிரினும் ஓம்பப்படும்"* - என்பது பொய்யாமொழிப் புலவரின் திருவாக்கு.

*''தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்''* - இது தமிழ்ப் பொன்மொழி

பாடசாலைகளில் பழகுகின்ற பழக்கம்தான் ஒரு மாணவனின் எதிர்கால வாழ்க்கையிலும் பிரதிபலித்துக் கொண்டு இருக்கும் என்பதில் இரு மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இருக்கமுடியாது.




சமூகத்தில் ஒரு மனிதனின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் என்பவற்றைக் கொண்டு குறிப்பிட்ட மனிதன் எந்தப் பாடசாலையில் படித்தார் என்பதை அன்று எதிர்வு கூறக்கூடியதாக இருந்தது.

அதாவது, அன்று பாடசாலைகள் ஒவ்வொன்றும் தமக்கேயுரித்தான தனித்துவமான நல்லொழுக்கக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை நடைமுறைப்படுத்திப் பேணிவந்தன என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். இதனால், மாணவர்களின் குண இயல்புகளைக்கொண்டு பாடசாலையையும் பாடசாலையின் பெயரைக் கொண்டு மாணவர்களின் குண இயல்புகளையும் எதிர்வு கூறக்கூடியதாக இருந்தது.

ஆனால், மாணவர்களின் நல்லொழுக்கக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் தொடர்பாக இன்றைய பெரும்பாலான பாடசாலைகளின் நிலை என்ன?

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் சமூகத்தில் மனித விழுமியங்கள் மறைந்து வருகின்றன என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை ஆகும்.

அதாவது, உதவி செய்யும் மனப்பான்மை, இரக்கம், மூத்தோரை மதித்து நடத்தல் போன்ற நற்பழக்கவழக்கங்கள் சமூகத்தை விட்டு விலகி வெகுதூரம் சென்றுகொண்டிருக்கின்றன. விளைவு என்ன?

போட்டி, பொறாமைகள், பகைமை உணர்வுகள், மூத்தோரை அவமதித்தல், ஏளனம் செய்தல், குரோதமனப்பான்மை, தான்தோன்றித்தனமான நடத்தைகள் போன்ற குண இயல்புகள் சமூகத்தில் மலிந்து கொண்டிருக்கின்றன. காரணம் யார்? நிச்சயமாக இன்று பாடசாலைகளில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் அல்லர். மாணவர்களை வழிப்படுத்துகின்ற கல்விச் சமூகம்தான்.

### ஆசிரியர்கள்

''மணியடித்தால் சோறு, இது மாமியாரு வீடு'' என்பதுபோல மணியடித்தால் வகுப்பறைக்குச் செல்வோம். திறமையான முறையில் கற்பித்து விரைவாகப் பாடத்திட்டத்தினைப் பூர்த்திசெய்வோம். முக்கியமாக வைத்திருக்க வேண்டிய கொப்பிகளுக்குப் புதுமணப் பெண்ணை அலங்கரிப்பது போல மினுமினுப்பான பல வர்ண கடதாசிகளினால் உறைபோட்டு வைத்திருப்போம். மீண்டும் மணியடித்தால் வகுப்பறையைவிட்டு வெளியேறுவோம். நல்லாசிரியர் என்ற கெளரவ விருதினையும் பெறுவோம்.

ஆனால், மாணவர்களின் நல்லொழுக்கக் கட்டுப்பாடுகள் போன்ற பரீட்சைக்குத் தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்தமாட்டோம். ஏனெனில், இதனால் எமக்குக் கிடைத்த நல்லாசிரிய விருது பறிக்கப்பட்டுவிடுமோ என்று பயப்படுகின்றோம்.

ஆகவே, மாணவர்கள் தவறு செய்தால் அவர்களைக் கண்டிக்கவும் மாட்டோம். தண்டிக்கவும் மாட்டோம். கண்டும்காணாத நிலையில் இருப்போம். ஏனெனில் நாங்கள் எப்பொழுதும் நல்லாசிரியர்களே.

### பெற்றோர்கள்

"எமது பிள்ளைகள் சிறப்பாகப் படிப்பது தனியார் கல்வி நிறுவனங்களில்தான் பாடசாலைகளில் அல்ல. ஆகவே, பாடசாலைகளில் நிகழும் சாரணியம், முதலுதவிப் பயிற்சி நெறிகள், நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகள், விளையாட்டுப் பயிற்சிகள், சமய நிகழ்வுகள் போன்ற பரீட்சையில் கேள்விவராத தேவையற்ற விடயங்களில் எமது பிள்ளைகள் பங்குபற்றுவதை நாங்கள் மனப்பூர்வமாகச் சம்மதிக்கமாட்டோம். ஏனெனில், இவை எமது பிள்ளைகளின் படிப்பைப் பாழாக்கிவிடும்.

அத்துடன், தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் படிப்பதற்குச் செல்லும் எமது பிள்ளைகளுக்கு இவை இடையூறுகளை ஏற்படுத்திவிடும்.

**சிவநேசராசன்**
ஆசிரியர், யா/ கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி

ஏனெனில், பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாவிட்டாலும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் ஒழுங்காகச் செல்வதையே நாங்கள் விரும்புகின்றோம். காரணம், பாடாசலைகளில் படிப்பு நிகழ்வதில்லை. தனியார் கல்வி நிறுவனங்களிலேயே உண்மையான படிப்பு நிகழ்கின்றது.

ஆகவே, பாடசாலைகளில் நிகழும் கலைநிகழ்வுகளில் சமய நிகழ்வுகள், சாரணியம் போன்றவற்றில் எமது பிள்ளைகள் பங்குபற்றுவதை என்றும் நாம் விரும்பமாட்டோம்.

### சில தனியார் கல்வி நிறுவனங்கள்

மாணவர்கள் படிப்பதற்காக வருவது எங்களிடம் மட்டுமே.

பாடசாலைகளுக்குப் பொழுது போக்குவதற்காகவே செல்கின்றனர். ஆகவே, எங்களை நம்பிவந்த மாணவர்களை நாங்கள் என்றும் கைவிடமாட்டோம். எனவே, பாடசாலைகளில் நிகழும் விசேட வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்வதை நாங்கள் விரும்பமாட்டோம். ஏனெனில், அங்குள்ள ஆசிரியர்களுக்குப் படிப்பிக்கத் தெரியாது.

அத்துடன், எமது நிறுவனங்களில் வகுப்புகள் நடைபெறும் நேரங்களில் பாடசாலைகளில் நடைபெறும் விசேட வகுப்புகள், கலை நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், விளையாட்டுப் பயிற்சிகள் போன்றவற்றில் எமது மாணவர்கள் பங்குபற்றுவதை நாங்கள் ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம். அப்படி யாராவது பாடசாலைக்குச் சென்றால் கடுமையான தண்டனை வழங்குவோம்.

ஏனெனில், இன்றைய மாணவர்கள் படிப்புக்காக முற்றுமுழுதாக நம்பி இருப்பது எங்களை மட்டுமே பாடசாலைகளை அல்ல பொழுது போக்குவதற்காகவே பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

### கல்விச் சமூகம்

ஆகவே, ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட யாழ். கல்விச் சமூகம் இன்றைய மாணவர்களுக்குச் செய்யக்கூடிய முதல் உதவி என்ன?

"கலியாணச் சந்தடியிலை தாலி கட்ட மறக்காமல் இருப்பதுதான்'' அதாவது, பாடத்திட்டங்கள் பரீட்சைகள் போன்றவற்றிக்குக் கொடுக்கப்படும் முக்கியத்தும் போன்று மாணவர்களின் சமூகமயமாக்கல் பயிற்சிகள் ஒழுங்கு, கட்டுப்பாடுகள் போன்றவற்றிற்கும் முன்னுரிமை அளிப்பது காலத்தின் அவசிய தேவை ஆகும்.

அத்துடன், தனியார் கல்வி நிறுவனங்களும் பாடசாலைகளும் இரு வேறு துருவங்களாகச் செயற்பட்டால் கல்வி கற்றலின் பிரதான நோக்கமே முற்றாகச் சிதைந்துவிடும். இதனால், சமூகத்தில் நல்ல மனிதர்கள் உருவாவது குறைந்துவிடும்.

ஆகவே, பாடசாலைகள் நல்ல பண்புடைய மனிதர்களை உருவாக்குவதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவீர்களா?

# கல்விச்சாலைக் காட்சிகள்



கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய நுழைவாயில் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி செந்தில்ராணி முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் தம்பிஐயா குமாரதாஸன் நுழைவாயிலை நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். திருமதி றதி குமாரதாஸன், கோட்டக் கல்வி அதிகாரி நா.சத்தியநாதன், கா.சந்திரசேகரம், முன்னாள் பரீட்சைத் திணைக்கள அத்தியட்சகர், சேவாலங்கா திட்டப்பணிப்பாளர் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (எ-204)



மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி ரதிதேவி சோதிலிங்கத்தின் சேவைநலன் பாராட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற அதிபர் திருமதி சோதிலிங்கம் ரதிதேவி மங்கள விளக்கேற்றுவதையும் புதிய அதிபராக நியமனம் பெற்ற செல்வி சி.சிவமலர், ஆசிரியர் திருமதி கு.சிறீகௌரி, சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலய அதிபர் சி.சிவகணேசசுந்தரன், மாணவர்கள் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: தொல்புரம் செய்தியாளர்)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ஶ்ரீகாந்தன், அதிபர் செ.சிவநடராசா, உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ. குபேரநாதன் ஆகியோர் அணிவகுத்து வருவதைப் படத்தில் காணலாம். (எ-204)



கொடிகாமம் அரசினர் வித்தியாலய பழைய மாணவனும் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசித்து வருபவருமான நடராஜலிங்கம் மோகன் பாடசாலைக்கு கணனித் தொகுதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

ந.மோகன், பாடசாலை அதிபர் சோ.ஶ்ரீகாந்தனிடம் கணனித் தொகுதியைக் கையளிப்பதையும் அருகில் முன்னாள் அதிபர் அ. திருநாவுக்கரசு நிற்பதையும் படத்தில் காணலாம். (எ-204)

சிவமயம்

# அல்வாய், மாலைசந்தை ஸ்ரீ...
# புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாச் சி...

## ஆதீன முதல்வரின் அருள் ஆசிச் செய்தி



அன்புள்ளவர்களிற்கு: அல்வாய் மாலை சந்தைப் பகுதியில் எழுந்தருளியிருந்து அருள் ஆட்சிபுரியும் ஸ்ரீ வரதராஜ விநாயகப் பெருமானுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டவிழா இன்று நடைபெறுவதையிட்டு, மகிழ்ச்சியடைகின்றோம். நாங்கள் வாழும் யுகத்தைக் கலியுகம் என்பர். யுகத்தின் தலைவனாக இருப்பவன் விநாயகன். விநாயக வழிபாடு இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தைத் தரக்கூடியதாகும்.

மனிதவாழ்வின் உயர்நிலையைத் தரக்கூடியது இறை வழிபாடாகும். அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்கள் ஆகும். ஆலயத்தில் நடைபெறும் பூசைகளும், விழாக்களும் மனிதன் சிந்தித்துச் செயற்பட வழிவகுக்கின்றன. அதற்காகவே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'. 'நித்தலும் எம்பிரான் கோயில் புக்கு' என்றும் எடுத்தியம்பி உள்ளனர். இதனை உணர்ந்த அல்வாய் மக்கள் விநாயகருக்கு ஆலயம் அமைத்து ஆலய வழிபாட்டில் தனித்துவமான தேர்த்திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பல லட்சம்ரூபா செலவில் புதியதொரு தேரை உருவாக்கியுள்ளனர்.

தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆன்மாக்களைப் பற்றி இருக்கும் மாயை இருளை அகற்றி ஞான ஒளியை ஏற்றுவதாகும். அதனாலே தேர்வடம் பிடித்தால் சொர்க்கத்தில் இடம்பிடிக்கலாம் என்று முன்னோர் இயம்பினர். தேரினுடைய அமைப்பு பல தத்துவங்களை எமக்கு உணர்த்து கின்றது. தேரினுடைய அமைப்பு பாதாளத்தையும் பூலோகத்தை யும் மேலோகத்தையும் காட்டுவதாகும். உடம்பை மூன்றாகப் பிரித்தனர். கால், அரை, தலை என்று தேருக்கும் மூன்று பாகங்கள் உள்ளன. இறைவனைத் தேரில் எழுந்தருளச் செய்வது மனிதனின் மனதில் இறைவனை எழுந்தருளச் செய்வதாகும். இதனாலேயே, தேர்த்திருவிழா சிறப்புடையதாகின்றது.

இத்தேரை உருவாக்கிய சிற்பக்கலைஞர் திரு.செ.பாலச்சந்திரன் அவர்களை வாழ்த்துகின்றோம். இத்தேருக்கு நிதி வழங்கியவர்களையும் ஆலய பரிபாலன சபையினரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. இந்த வெள்ளோட்டத்தை நிதர்சனமாக்க வெளிவரும் மலர் சிறப்பாக அமைந்து எல்லோருக்கும் பயன் பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
*இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை ஆதீனம்.*

## ஆசியுரை



வடமராட்சிப் பிரதேசத்தில் மாலைசந்தை என்னுந் திருத்தலத்தில் கோயில்கொண்டெழுந்தருளி, அருள்பாலிக்கும் ஸ்ரீ வரதராஜ விநாயகப்பெருமானுக்குக் கலை வனப்புடன் கூடிய அழகிய சித்திரத்தேர் ஒன்றினை உருவாக்கி, அடியார்கள் தமது பக்தியின் சின்னமாய் ஆனி உத்தரத்தன்று (13.07.2005) அர்ப்பணிக்கவிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அரியதொரு கலைப் படைப்பாகிய இத்தேரினை உரியவாறு பேணிப் பாதுகாப்பதற்காகப் புதிதாகத் தேர்முட்டியொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்தின் தேர் ஓடும் வீதியும் நன்கு செப்பனிடப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது.

சித்திரத்தேர் வெள்ளோட்டமும் எம்பெருமானின் தேர்த்திருவிழாவும் இவ்வாலயத்தில் சிறப்புற நடைபெற விநாயகப் பெருமானின் திருவருள் துணைநிற்பதாகுக! ஊர் கூடித் தேர் இழுத்தல் என்ற மரபுக்கியைய சித்திரத் தேரினை நிர்மாணிக்கும் பணி ஆலயத்தின் பிரதமகுரு, ஆலய பரிபாலன சபையினர், சிற்பக் கலைஞர் மற்றும் அடியார்கள் ஆகியோரது கூட்டுமுயற்சியின் பயனாய் சிறப்புற நிறைவேறியுள்ளன. இது ஓர் உன்னதமான நற்பணி.

சிவாகம மரபில் விதிக்கப்பட்டுள்ள நைமித்திகக் கிரியையாகிய மகோற்சவத்தில் தேர்த்திருவிழா பிரம்மோற்சவம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இறைவனடியார்கள் என்ற உணர்வில் அனைவரும் ஒன்றிணையும் அற்புத விழாவாகவும் இது விளங்குகின்றது. இம்மகோற்சவத்தின்போது எம்பெருமான் தேரில் ஆரோகணித்து உலாவரும்வேளை அடியார்கள் தமது பிறவிப் பிணியினின்றும் மீட்சிபெறவும், ஆணவமலம் ஒடுங்கவும், வாழ்வு சிறக்கவும் அவர்களுக்கு வரப்பிரசாதமாய் அமைவது, தேரின் வடத்தைப் பிடித்துத் தேரினை உலாவரச் செய்தலாகும். இதன் பயனாய் இவ்விழாவின்போது அனைவரும் எம்பெருமானது திருவருளுக்குப் பாத்திரராகும் பேறு கிட்டுகின்றது.

இச்சித்திரத் தேரின் உருவாக்கத்தில் பலவழிகளில் ஈடுபட்ட அனைத்து அடியார்களுக்கும் எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக! மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் வளத்துடனும் இனிதே சாந்தியுடன் வாழ எம்பெருமானின் கிருபாகடாட்சம் கிட்டுவதாகுக! மகோற்சவத்தின் திருவருட்பேறு எங்கும் பரவி நன்மை உண்டாவதாகுக.

**கலாநிதி ப.கோபாலகிருஸ்ண ஐயர்**
முன்னாள் கலைப்பீடாதிபதி,
யாழ்.பல்கலைக்கழகம்.



## மோட்ச சாம்ராஜ்யத்தில் இட...
## விநாயகரின் சித்திரத்தேர்...

எல்லையில் புகழ் அல்வாய்க்கு ஈடாக உரைப்பதற்கு எந்த ஊரும் இல்லை. உ...
அல்வாய். தமிழ் அறிஞர், புலவர்கள், கவிஞர்கள், சைவப்பெரியார்கள், சட்டத்த...
ஸ்தாபகர்கள், அதிபர்கள், நூலாசிரியர்கள் என இந்த வரிசை அல்வாயைப் பொறு...
தனிச்சிறப்பு உண்டு.

சொல் வாய்ந்த கீர்த்தி மிகு துங்கர் வதிவிடமாம்
அல்வாய் வள நகருக்காமீடு - நல்ல தமிழ்ப்
பாவாண ருஞ் சாற்று பான்மையற்றுச் சாய்ந்து வெறும்
நாவாண ராவர் நலிந்து.

என அல்வாய் பற்றி ஒரு பாடலும் உண்டு. 'அல்வாய்' என ஏன் அழைக்கப்படுகிற...
தமிழகத்தில் உள்ள ஊர்ப்பெயர்கள் சில ஈழத்தமிழகத்திலும் உண்டு. நல்லூர்...
என்பன சில 'ஆலவாய்' என்பது அல்வாய் என மருவியிருக்கலாம் இது நல்ல...
கப்பட வேண்டியது. குறித்த இந்த ஸ்தானத்தில் மாலைவேளைகளில் சந்தை...
ஏற்பட்டதாம். பழைய காணி உறுதிகளில் மாலைச்சந்தை எனும் சொல்லே இருக்...
வந்து மாலிசந்தி என மருவியிருக்குமே ஒழிய மாலுசந்தி என்னும் சிங்கள ம...
குறிக்கும். இதற்கு அண்மையிலுள்ள இடம் வதிரி என்பது பதரி என்பது இலந்தை...
மாலை சந்தை, மாலை சந்தையாகி மாலி சந்தியாகியிருக்கலாம்.

இந்த இடத்தில் அமைந்துள்ளது. விநாயகர் ஆலயம் . இது பழம்பெருமை வாய...
விநாயகர். அவர் அருள் வரதராஜர். அவர்தம் அருட் பிரவாகத்தின் பயன் இன்...
அனைவரும் தம்மால் இயன்றதை இயன்றவரையில் அர்ப்பணிப்புச் செய்திருக்கி...

வரதராஜர் ஒவ்வொருவர் சித்தத்திலும் புகுந்து கனிவித்து மெத்த மெத்த உதவப் ப...
அவனன்றி ஓர் அணுவும் அசையாது. பொது மக்களின் நிதியுதவி மட்டுமன்றி, ...
நன்முறையிற் பயன்படுத்தி இத் தேரை உருவாக்கியிருக்கிறார் எங்கள் சிற்ப கலா...

இன்று ஆனி உத்தரத்திருநாளிலே தேர் வெள்ளோட்டம் நடைபெறத் திருவருள்...
'அச்சிவனுறை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரா' என்பர் அருணகிரியார். சிவ...
திரிபுர தகனம் என்பர் திருமூலர். அச்சது பொடி செய்த அதிதீரராகிய அருள் வரத...
வருகிறார். ரதோற்சவம் சர்வானுக்கிரகத்தைக் குறிக்கும். இடம் பிடிக்கவேண்டு...
எல்லீரும்
வாருங்கள்.

மாலை சந்தை வரதராஜனார் பூங்
காலை யனுதினம் கசிந்துளம் வைப்பே...
தேர் வெள்ளோட்டத் திவ்விய தரிசனம்
ஊர்வாழ் பொது சன உய்தி தருவதே.

**அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயப் பரிபாலனசபை உப செ...**

## தேர் வெள்ளோட்டம் சிறக்கட்டும்



திருவருள் பெருகும் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகனுக்கு திராவிட மரபுச் சிற்பத்தேர் நிர்மாணித்து வெள்ளோட்டம் காண்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். திரிபுரதகனத்தின் போது தந்தையின் இரதத்தினுடைய அச்சாணியையே உடைத்தவர் விநாயகப் பெருமான். தந்தையாக இருந் தாலும் சட்டம் பேணப்படவேண்டும். விநாயகப்பெருமானை நினைக்காது ஒருகாரியமும் ஆகாது. மிகுந்தபக்தியுடனும், சிற்பசாஸ்திரபிரமாணத்துடனும், குருவின் ஞானப்பார்வையுடனும் நிர்மாணிக்கப் பட்டு, வெள்ளோட்டம் விடப்படும் நாளில் வெற்றித் தெய்வம் ஸ்ரீ காளி, துர்க்கை, குரு, மாதா, பிதா ஆகியோரை வணங்கிக்கொண்டு நிர்மாணக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், திருப்பணிச் சபையினர் மற்றும் இவ்வூர்மக்கள் யாவர்க்கும் விநாயகப் பெருமான் திருவருள் பெருக வேண்டி நிற்கிறேன்.

**தேர்த் திருப்பணி தெய்வீகப் பணி**

விஸ்வப் பிரம்மஸ்ரீ ஸ்தபதி **செ.பாலச்சந்திரன்** ஆசாரியார்
*ஸ்ரீ காளிகா சிற்பாலயம், புத்தூர்.*

## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் பல நூற்றாண்டு காலம் பழைமைமிக்கது. ஆதியில் சிறியதொரு கொட்டில் வைத்து வழிபட்டு வரப்பட்டது. பின்பு 1801 இல் மழவராய முதலியார் பரம்பரையைச் சேர்ந்த முதலியார் ஒருவரால் நிரந்தரக் கட்டடம் ஒன்றில் வைத்துப் பூசிக்கப்பட்டு வரப்பட்டது. காலப்போக்கில் வருடாந்த உற்சவமாக ஆவணிச் சதுர்த்தியில் ஒருநாள் விழாவாக எம்பெருமானுக்கு விழா எடுக்கப்பட்டு வெளிவீதிவலம் வந்தார்.

இந்த ஆலயம் மழவராய முதலியார் வழித் தோன்றலில் வந்தவர்களால் தலைமுறை தலைமுறையாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தது. 1995 இல் இந்த ஆலயத்திற்கு பரிபாலனசபை ஒன்று அமைக்கப்பட்டு இதே வழித்தோன்றலில் வந்த நான் அதன் தலைவராகச் செயற்பட்டு வருகின்றேன்.

எமது ஆலயத்திற்கு இருந்த பழைய கட்டுத்தேர் பழுதடைந்த காரணத்தால் புதிய சித்திரத்தேர் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் 1985 இல் நானும் எனக்கு உதவியாக இருந்த சிலரும் ஈடுபட்டு அதற்கான மரங்களைப்பெற்று சிற்பாசாரியார் திரு.ஜெயராஜ் அவர்களின் ஆலோசனைக்கமைய தேருக்கான கால்கோள்விழா எடுக்கப்பட்டது. ஆனால், பின்னர் 1987 இல் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் இது கைகூட வில்லை. இந்நிலையில், 2003 இல் எமது பரிபாலன சபையால் ஒரு தேர்த்திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற விநாயகரின் பக்தகோடிகளின் நிதிஉதவியாலும் பொருளுதவியாலும் இச்சித்திரத் தேர் அமைக்கும் பணி பூர்த்திசெய்யப்பட்டது.

சித்திரத் தேர், தேர் தரிப்பிடம், தேரோடும் வீதிஅமைக்க தீர்மானிக்கப்பட்டு தேரமைக்கும் பணி ஏற்கனவே 1997 இல் எமது ஆலயத்திற்கு ஒருசிறிய தேரை அமைத்துத் தந்த புத்தூர் ஸ்ரீ காளிகா சிற்பாலய விஸ்வப் பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன் ஆசாரியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் எமக்கு இன்று அச்சித்திரத் தேரை அழகாக அமைத்துள்ளார்.

தேர்தரிப்பிடம் அமைக்கும் பணி 'ரூபின்ஸ்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நிறுவனத்தாரும் எம் ஆலய முன்றிலில் இன்று கம்பீரமாகத் தோற்றமளிக்கும் தேர்த்தரிப்பிடத்தை அழகுற அமைத்துத்தந்துள்ளனர்.

தேரோடும் வீதியை எமது தேர் திருப்பணிச் சபையினர் ஊரிலுள்ள உழவுஇயந்திர உரிமையாளர்கள் மற்றும் எமது தொண்டர்களின் உதவியுடன் மண்நிறைத்து, தார்போட்டு, வீதிஅமைத்துள்ளனர். இத்தார் வீதி அமைப்பதில் திரு.A.A.ஜெயானந்தன் அவர்கள் பெரிதும் உதவியுள்ளார்.

இவ்வேளையில் இச்சித்திரத் தேர், தேர்த் தரிப்பிடம், தேரோடும் வீதி அமைத்தல் என்பவற்றிற்கு பல்வேறு விதத்திலும் நிதி உதவி, பொருள் உதவி, உடல் உதவி வழங்கியோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, தேர் அமைத்த விஸ்வப் பிரம்மஸ்ரீ ஸ்தபதி செ.பாலச்சந்திரன், 'ரூபின்ஸ்' நிறுவனத்தினர், வீதி அமைப்பதில் உதவிய உழவு இயந்திர உரிமையாளர்கள், தொண்டர்கள் மற்றும் தார் ஊற்றி வீதி அமைத்துத் தந்த திரு.A.A.ஜெயானந்தன் ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றேன். எல்லாம்வல்ல விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

**கு.சிறிசண்முகதேவ்**
*தலைவர், பரிபாலனசபை மற்றும் தேர்த்திருப்பணிச் சபை.*

## தேர்த்திருப்பணிச் சபை...

அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் அல்வாய் கிழக்கில் க...
வீதியில் அமைந்துள்ள வடமராட்சியிலே மிகப்பழைமை வாய்ந்த ஆலயம்...
பெருந்திருவிழா நடைபெறுகின்றது. இந்த ஆலயத்தில் இதுவரை பயன்படு...
அமைதியின்மை காரணமாக, உரியமுறையில் பேணிப் பாதுகாக்கமுடியாது போ...
1985 ஆம் ஆண்டு ஒரு சித்திரத் தேர் அமைக்கும் முயற்சியில் இறங்கியபோ...
இடமளிக்கவில்லை. மீண்டும் 2003 ஆம் ஆண்டில் எமது ஆலயத்திற்கு புதிய சித்திரத்...
அமைப்பதற்கும் தேர்திருப்பணிச் சபை அமைக்கப்பட்டது.

இத்தேர்த்திருப்பணிச் சபையினர் அழகான ஒரு தேர் மாடத்தை அமைக்க 'ரூ...
அந்நிறுவனத்தினர் அழகான ஒரு தேர்மாடத்தை நிர்மாணித்துத்தந்துள்ளனர். சித்...
ஸ்தபதி செ.பாலச்சந்திரன் ஆச்சாரியார் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரும் அ...
சித்திரத்தேர் ஒன்றை அமைத்துத் தந்துள்ளனர்.

நீர் தேங்கி நிற்கும் ஆலயவீதி இன்று அழகிய தேரோடும் வீதியாக அமைப்பதில் எ...
உரிமையாளர்கள் ஆகியோர் பெரிதும் உதவியுள்ளனர்.

பல்வேறு இன்னல்கள், கஷ்டங்களுக்கு மத்தியில்தான் மேற்கூறப்பட்ட எமது தேர்...
விநாயகப்பெருமானின் அருள்கிடைத்துள்ளது. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலு...
இத்திருப்பணி இனிதே நிறைவேறியுள்ளது.

இத்திருப்பணி இனிது நிறைவேற நிதி உதவிசெய்தோர், பொருள் உதவிசெய்தோ...
தந்த விஸ்வப் பிரம்மஸ்ரீ ஸ்தபதி செ.பாலச்சந்திரன் ஆச்சாரியார் மற்றும் அவரது கு...
குழுவினர், உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் வீதி அமைத்துத் தந்த ஒப்...
சபையின் மனமார்ந்த நன்றிகள். இன்று (13.07.2005) புதன்கிழமை நிகழும் சி...
எமது இரதோற்சவத்திலும் வடம்பிடித்துத் தேர் இழுக்க அணிதிரண்டு வந்து அவன்...

**சி.தம்பிமுத்து** *பொருளாள...*


மயம்

# ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய

# சிறப்புமலர் -13-07-2005 புதன்கிழமை



## அருளுரை



அல்வாய் கிழக்கில் மாலை சந்தைப்பதியில் இருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ வரதராஜ விநாயகா வணக்கம். காலாதிகாலமாக விநாயகப்பெருமான் மாலை சந்தைப் பிள்ளையார் என்று அழைக்கப்படுபவர். இவ்வூர் மக்களால் மிகவும் நேசிக்கப்படுபவர். பலவருடங்களாக மகோற்சவம் கண்டவர். காலத்தின் கோலமாக வெளிவீதியுலா வரமுடியாதிருந்தது. பழைய தேர், தேர்முட்டி, வீதிகள் பழுதடைந்தன. எம்மூர் மக்கள் புதியதேர் அமைக்க தேர்த்திருப்பணிச் சபை நிறுவி வெளியிலுள்ள பிள்ளைகள், ஊரிலுள்ள நல்லமனம் படைத்தவர்கள் உதவியோடு, புதியதேர் அமைக்க முற்பட்டார்கள்.

சிறந்தமுறையில் தேர்தரிப்பிடம் (தேர்முட்டி) கட்டு வித்தார்கள். பாரிய இயந்திர உதவியுடன் மண் போட்டார்கள், கல்போட்டார்கள், தார் போட்டார்கள், அழகான தேர் இன்று வெள்ளோட்டத்துக்குத் தயாராக உள்ளது மகிழ்ச்சியைத் தருகின்றது. தேர் என்னுஞ் சொல் இரண்டு எழுத்துத்தான். ஆனால், செய்வதோ மிக மிகக் கஷ்டமான வேலை. இத்தனை காரியங்களுக்கும் பணம் கொடுத்ததோ, செய்வித்ததோ திருவருள் தான். அத்தோடு, 16.07.2005 சனிக்கிழமை எம்பெருமான் அழகியதேரில் ஆரோகணித்து மிக அழகான தேர் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். புதிய வீதியில் தேர் அசைந்துவரும் காட்சியைப் பார்த்தவர்கள் பிறவிப் பயனை அடைவார்கள்.

திருப்பணிச் சபையினர், நிர்வாக சபையினர், பக்தர்கள், தொண்டர்கள், தேர், தேர்முட்டி அமைத்த கலை ஞர்கள் எல்லோருக்கும் எம்பெருமான் திருவருள்புரிவாராக.

கிரியா கலாப முக்தாமணி
**ச.தேவராஜக்குருக்கள்**
*விநாயகப் பெருமானை அர்ச்சிக்கும் பாக்கியம் பெற்றவர்.*

## எமது ஆலயம்

**அஞ்சல் என அருளி**
**அழகு சித்திரத் தேரில்**
**பஞ்சமுக விநாயகனே**
**பவனி வலம் வருவாய்**
**நெஞ்சமதில் நீ நிறைந்தாய்**
**குஞ்சரனே கணபதியே**
**கஞ்சமலர் சேவடிகள்**
**கதியென நம்பினேன்**

*மகா வித்துவான் வீரமணிஐயர்*

எமது ஆலயம் 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. அன்று 'கொட்டி மூட்டு' என்றும், இன்று மாலைசந்தை என்றும் வழங்கும் திவ்விய பூமியில் வயல்நடுவே ஆலமரம், மாமரம், அரசமரம், அத்திமரம், இத்திமரம், புளியமரம், வேப்பமரம் சூழ் சோலை நடுவே வயல்வேலைசெய்த பாமர மக்களினால் அமைக்கப்பட்ட சிறியகுடிலில் இருந்து அருளாட்சிசெய்தவர் எமது ஸ்ரீ வரதராஜ விநாயகர்.

18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பரம்பரை பரம்பரையாக இந்த இடத்திற்கு உரிமையாளரான சேதுப்பிள்ளை எனும் பெரியாருக்கு பலவிதமான அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார் எம்பெருமான். ஆங்கிலேயர் காலத்தில் நீதித்துறையில் உயர் அதிகாரியாக இருந்த அப்பெரியார் திராவிட சிற்பசாஸ்திரத்தின் படி ஆலயம் அமைத்து அந்தணர்களைப் பூசைக்கு அமர்த்தி ஆலயம் சிறப்பாக இயங்குவதற்கு வயல், தோட்டம் என்பவற்றை தர்ம சாதனம் செய்திருக்கின்றார்.

இன்றும் ஆலயம் அவர்களது பரம்பரையைச் சேர்ந்தவர்களாலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. 1908 ஆம் ஆண்டு முதல் கொடியேற்றம் நிகழ்ந்து தஷிணாயன சங்கிராந்தியான ஆடி முதலாம் திகதியைத் தீர்த்தத் தினமாகக் கொண்டு பெருந்திருவிழா நடைபெறுகின்றது.

1985 ஆம் ஆண்டு சிறி சண்முகதேவ் அவர்களினால் புதிய தேர் அமைப்பதற்கான அங்குரார்ப்பணம் நடைபெற்றது. வேலைகள் நடைபெற்று வரும் போது 1987 ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் எமது ஆலயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆனால், 1996 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை ஆலய வடக்கு வீதி, இராணுவ வேலிக்கு உட்பட்டிருந்ததால் எமது பெருந்திருவிழா உள்வீதி உற்சவமாகவே நடைபெற்றுவந்தது.

2002 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின் அடியார்களினால் அமைக்கப்பட்ட தேர்த்திருப்பணிச் சபையினரின் அயராத உழைப்பினாலும் இடம்பெயர்ந்தும் எமது விநாயகனின் அருளாட்சிக்குட்பட்ட பிள்ளைகளின் பேருதவியினாலும் எம்பெருமானின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று நிகழ்கின்றது. இந்த நற்காரியத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரும் அட்ட ஐஸ்வரியங்களும் பெற்றுவாழ எம்பெருமான் திருவருள் என்றென்றும் துணைநிற்கும்.

**பிரம்மஸ்ரீ தே.இரவீந்திரக்குருக்கள்.**

## ...ில் இடம் பிடிக்கவேண்டுமாயின் ...த்தேர் வடம்பிடிக்க வாருங்கள்

...இல்லை. உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும் புகழ்பெற்ற பெரியார் பலரைத்தந்த ஊர்
...ள், சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், கணிதமேதைகள், பத்திராதிபர்கள், பாடசாலை
...யைப் பொறுத்த வரை நீண்டு கொண்டே போகும். யாழ்.குடா நாட்டில் அல்வாய்க்கு ஒரு

...யும்

...க்கப்படுகிறது? இருளின் வாய் என்ற கருத்திலா? அப்படியிருக்க முடியாது. தென்னிந்திய
...டு. நல்லூர் - பூநகரியிலும் ஒரு நல்லூர் உண்டு - திருநெல்வேலி திருப்பெருந்துறை
...இது நல்லறிஞர் ஆராய்ச்சிக்குரியது. இனி 'மாலிசந்தி' என்ற பெயரும் நுனித்து நோக்
...ளில் சந்தை ஒன்று நடைபெற்று வந்ததாம். ஆகவே மாலைச்சந்தை என்ற பெயர்
...ல்லே இருக்கக் காணப்படுகிறது என்பர் அறிஞர். இது கால கதியில் மாலைச்சந்தி என
... சிங்கள மயமாக்கப்பட்ட பெயராக இருக்காது. சிங்களத்தில் மாலு என்பது மீனைக்
...து இலந்தை. இலந்தை ஏராளமாக நின்றதால் பதரியாகி, வதிரியாக மருவியது போல்.

...ருமை வாய்ந்தது. இங்குகோவில் கொண்டெழுந்தருளியிருப்பவர் அருள் ஸ்ரீவரதராஜ
...பன் இன்றைய வெள்ளோட்டத் தேர். இது அமைவதற்கு மாலை சந்தைப் பொது மக்கள்
... செய்திருக்கிறார்கள். தாராளமாக அள்ளி வாங்கியிருக்கிறார்கள்.
...த உதவப் பண்ணியிருக்கிறார். அவனருளாலே தான் அவன் தாள் வணங்க வேண்டும்.
...டுமன்றி, உடலுழைப்பும் கனகச்சிதமாகக் கிடைத்திருக்கின்றது. இவற்றையெல்லாம்
...ா சிற்ப கலாமேதை புத்தூர் விஸ்வப் பிரம்மஸ்ரீ ஸ்தபதி செ. பாலச்சந்திரன் அவர்கள்.
...ந் திருவருள் பாலித்துள்ளது. எம் பெருமான் உலாவந்த முதற்தேர் திரிபுர தகனத்தேர்
...ரியார். சிவனும் விநாயகரும் வேறு வேறல்லர். இருவரும் ஒருவர். மும்மல காரியம்
...அருள் வரதராஜர் இச்சகத்து ஆன்ம கோடிகள் எல்லாம் உய்திபெற இரதத்தில் உலா
...கவேண்டுமெனில் - மோட்ச சாம்ராச்சியத்தில் - வடம் பிடிக்க, வரதராஜர் அன்பர்களே

...ார் பூங்
...ாம் வைப்பனே
...ய தரிசனம்
... தருவதே.

...பை உப செயலாளரும், தேர்த்திருப்பணிச்சபைச் செயலாளரும் ஆகிய திரு.இ.தங்கராசா அவர்கள்.

## ...ிச் சபையினரின் அறிக்கை

... கிழக்கில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான
...லயமாகும். இங்கு ஆடிப்பிறப்பிற்குவரும் தீர்த்தோற்சவத்தை முன்வைத்து வருடாந்த
... பயன்படுத்தப்பட்டு வந்த கட்டுத்தேர் அண்மைக் காலங்களில் நிலவிய நாட்டின்
...யாது போனதால் பழுதடைந்துபோயிற்று. இந்நிலையில் விழிப்படைந்த எம்ஊர் மக்கள்
...றங்கியபோதும் அதனை நிறைவேற்றுவதற்கு அன்றைய காலச்சூழ்நிலை எமக்கு
...திய சித்திரத் தேர் ஒன்று அமைப்பதற்கும் அதற்கான தேர்மாடம், தேரோடும் வீதி என்பவற்றை

...மைக்க 'ரூபின்ஸ்' நிறுவனத்தாருடன் செய்துகொண்ட கட்டடஒப்பந்தத்திற்கு அமைய
...ளனர். சித்திரத்தேர் அமைக்கும் பணி புத்தூர் ஸ்ரீ காளிகா சிற்பாலய விஸ்வப் பிரம்மஸ்ரீ
... அவரும் அவரது குழுவினரும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் எமக்கு அழகான

...மப்பதில் எமது தேர்த்திருப்பணிச் சபைக்கு எமது தொண்டர் குழுவினர் உழவுஇயந்திர

...எமது தேர்த் திருப்பணிவேலைகள் நிறைவேறி இன்று தேர் வெள்ளோட்டம் நிகழ்வதற்கு
...நாடுகளிலும் வாழும் எம்பெருமான் அடியார்கள் வாரிவழங்கிய நிதிஉதவியால்தான்

...விசெய்தோர், தேர்மாடம் அமைத்துத்தந்த ரூபின்ஸ் நிறுவனத்தினர், தேர் அமைத்துத்
... அவரது குழுவினர்க்கும் எமது ஆலயவீதி அமைப்பதில் பெரிதும் உதவிய தொண்டர்
...த் தந்த ஒப்பந்தகாரர் திரு.A.A.ஜெயானந்தன் ஆகியோர்க்கும் எமது தேர்த்திருப்பணி
... நிகழும் சித்திரத் தேர் வெள்ளோட்டத்திலும் 16.07.2005 சனிக்கிழமை நடைபெறும்
...ந்து அவன் அருள்பெற அழைக்கின்றோம்.

*...பொருளாளர், தேர்த்திருப்பணிச் சபை, மாலைசந்தை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயம்.*

## கரவெட்டிப் பிரதேச செயலரின் செய்தி

வடமராட்சியின் மையப்பகுதியான கரவெட்டிப் பிரதேசத்தில் அல்வாய் கிழக்குக் கிராமத்தில் மாலை சந்தையில் கோயில்கொண்டெழுந்து அருளாட்சி செய்கின்ற விநாயகர் ஆலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்புமலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

மிகவும் தொன்மையும் வரலாற்றுச்சிறப்பும் மிக்க இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் இப்பிரதேசத்தின் நிர்வாக மையமாக விளங்கும் பிரதேச செயலகத்திற்கும், அல்வாய் கிராமத்திற்கும் அடைக்கலம்தந்து அருள்மழை பொழிந்துகொண்டிருக்கின்றார்.

இக்கிராமமக்களின் ஒற்றுமையும் ஆலயத்தின் செயற்பாடுகளில் காட்டும் ஈடுபாடும் காரணமாக இந்த ஆலயம் துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதனைக் கண்கூடாகக் காணமுடிகின்றது. அழகிய சித்திரத்தேரில் பவனிவரும் விநாயகப்பெருமான் எமது நாட்டிற்கு அமைதியினையும், நிரந்தர சமாதானத்தினையும் பெற்றுக்கொடுப்பதுடன், எம் மக்களுக்கும் மகிழ்ச்சியான வாழ்க்கையினை வழங்கவேண்டுமென எம்பெருமானுடைய பாதங்களை வணங்குவதுடன், விநாயகப்பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன்.**
*பிரதேச செயலர், கரவெட்டி.*

## வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஈழவள நாட்டின் வளமுள்ள வடமராட்சியில் அமைந்துள்ளதுதான் அல்வாய் மாலை சந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயில். எம் எல்லோருக்கும் அல்லல் தீர்க்க வயலும், தோட்டங்களும் சூழ, ஆலொடு அரசும் அத்தியும் மாவொரு வேம்பும் சூழ அறவாழி அந்தணர்களும் வேளாண் குலத்தோரும் பஞ்சகம்மாளரும் புடைசூழ, ஈகையின் சிறப்பான அன்னதான உண்டியை சிறப்பாக வழங்கி உதவி, ஆடிப்பிறப்பன்று கூடிக் கூழ் குடிப்பதற்குச் செம்மையுடன் தீர்த்தமாட எம்பிரான் சித்திரத்தேரேறி வந்தருள நடைபெறும் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெற நாமும் வாழ்த்தி வணங்குகின்றோம்.

திருவிழாக்கள், மகோற்சவங்கள் இறைவனின் ஐந்தொழில்களைக் குறிப்பதாகவே அமைகின்றன. தேர்த்திருவிழாவானது இறைவனின் அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. தேரின் அமைப்பானது தீபத்தின் தோற்றத்தை ஒத்தது. தீபத்தில் சுடர்விடும் சுவாலையானது அடியார்கள் மனதில் உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுடன் கூடிய தீய சக்திகள், பழக்க வழக்கங்களை இறைவன் அழித்து இரட்சிப்பான் என்ற கருத்தின் பாற்பட்டது.

'நன்றே செய் அதை இன்றே செய்' என்ற எமது தொண்டர் சபையின் மகாவாக்கியம்போல் எம் பெருமான் ஆலய சித்திரத்தேர் திருப்பணியும் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் செவ்வனே நிறைவேற்றப்பட்டு, வெள்ளோட்டப் பெருவிழா காண்பது எம் அனைவருக்கும் மகிழ்ச்சியான நிகழ்வே. எனவே, இப்பார்த்திப ஆண்டில் நடைபெறும் வெள்ளோட்டம் சிறப்புறவும், ஆடிப்பிறப்பிற்கு முதல்நாள் நடைபெறும் தேர்த்திருவிழாவில் எம்பெருமான் தேரேறவும், எம்முள் உள்ள தீவினைகளை அழித்து அனைவரும் வளமான வாழ்வுகிடைக்க எம் பெருமான் மாலைசந்தை ஸ்ரீவரதராஜ விநாயகரை தொண்டர் சபையினராகிய சிறியோரும் வேண்டி நிற்கின்றோம்.

**அல்வாய் மாலைசந்தை விநாயகர் ஆலய தொண்டர் சபை**

(37553)(50-11)

**- ஆலய பரிபாலன சபையினர் -**

## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் நரசிம்ம நாயுடு

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன்** அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 9122836.

(37618) (42-11-16)

## கணபதி ஜோதிட நிலையம்

பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37588)(42.11.16)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி),
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (37589)
(26-11-16-42)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

11-07-2005 - 18-07-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

- சக்தி குறைவு
- ஞாபக மறதி
- பயம்
- நடுக்கம்
- நித்திரைக் குறைவு
- ஆண்மைக் குறைவு
- நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: *இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்*

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-42003) (26-11-16-42)


## மரண அறிவித்தல்

### செல்வி சோபனா திருபாலசிங்கம்



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சோபனா திருபாலசிங்கம் அவர்கள் லண்டனில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் சின்னத்தங்கச்சி தம்பதியரின் (பன்னாலை), காலஞ்சென்ற பூதப்பிள்ளை, ஆச்சிப்பிள்ளை (பலாலி) தம்பதியரின் பேர்த்தியும் திருபாலசிங்கம் (முன்னாள் D.D.Hayley'S Agro-products Ltd) - அருள்நாயகி தம்பதியரின் இரண்டாவது செல்வப் புதல்வியும் உமாசங்கர் (லண்டன்), திருவருட்செல்வி (H.N.D.A உயர் தொழில்நுட்பக் கல்லூரி 2ஆம் வருடம், 2003 G.A.Q உயர்கல்லூரி), பிருந்தா (நுண்கலை - இசைத்துறை முதலாம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), பிரசன்னா (யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மயில்வாகனம் (ஆசிரியர், கொ/சென்.தோமஸ் கல்லூரி), செல்வலக்சுமி, காலஞ்சென்ற குணபாலசிங்கம் (சட்டத்தரணி - கைதடி), தனலக்சுமி, தனபாலசிங்கம் (அதிபர், யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்), சுமதி (போரூட் - மல்லாகம்), குலநாயகி, திருமதி மல்லிகாதேவி இராசரத்தினம் (இரத்தினம்), திருமதி சத்தியநாயகி சிவகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், இராசநாயகம் (முன்னாள் Ausitor United Tractors Equtpment L.D), மைதிலி (ஆசிரியை, யா/மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயம்), ஸ்ரீதரன் - கமலினி (சுவிஸ்), கெங்காதரன் - றதனி (நோர்வே) ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் "பழவீடு" இளவாலையில் இன்று (13.07.2005) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழவீடு,
இளவாலை. (37651) (42-11-16)

தகவல்:
நா.திருபர்லசிங்கம் (தந்தை)


உ
சிவமயம்

## சதுர்ஷிகா திருமணசேவை

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் புரியும் மணமகன்களுக்கு பட்டம்பெற்ற அல்லது A/L படித்த, கிரகபாவம் குறைந்த அழகிய மணமகள்கள் தேவை. அத்துடன் B.A.,B.Com,-B.Sc. பட்டம் பெற்ற மணமகன்களும் தேவை.

உடன் போட்டோ, ஜாதகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சந்திக்கும் காலம் : 11.07.2005 தொடக்கம்
20.07.2005 வரை

நேரம்: 9 a.m. –12.30p.m.
3.30p.m. –5.30p.m.

முகவரி: திரு.N.கந்தையா,
C/O.R. சாந்தகுமார்,
மூத்தநயினார் கோயிலடி,
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(37606)(38-11-16-42)


## அதிபர் ஓய்வு

ஏழாலை,ஜூலை13

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் அதிபர் அ.பேரம்பலம் நேற்று முன்தினம் முதல் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் 20 வருடங்களாக ஆசிரியராகவும் தொடர்ந்து 17 வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் கடந்த 7 வருடங்களாக மேற்படி பாடசாலையில் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-45-202)

## மாமனிதர் துரைராஜா நினைவுப் பேருரை

வலி.தெற்கு,ஜூலை13

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் அ.துரைராசாவின் நினைவு தினமும் நினைவுப் பேருரையும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற கால்நடை உற்பத்தி சுகாதார மாகாண இயக்குநர் எம்.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்புச் சித்தி பெற்றுப் பல்கலைக்கழகத்துக்கு இவ்வருடம் அனுமதி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் இந்நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளனர்.

(ஒ-152-202)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி,ஜூலை13

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார விழா இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக நலன்புரிக் கழகத்தால் நடத்தப்படும் இவ்விழாவில் கழகத் தலைவர் ச.வீரசிங்கம் தலைமை வகிப்பார்.

இவ்விழாவில் ஆளணி உதவியாளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற க.பாலசுப்பிரமணியம், ஓய்வுபெற்றுச் சென்ற திருமதி த.சூரியகுமாரன், க.இராஜதுரை ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ஒ-117-202)

## கலாசார நிலையம் விரைவில் அமைப்பு

நல்லூர்,ஜூலை13

மாவட்ட கலாசார நிலையம் விரைவில் அமைக்கப்படவுள்ளதாகவும் - இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும்-

இதன்மூலம் கலைஞர்கள் கூடுதலான வாய்ப்புகளைப் பெறக்கூடியதாக இருக்கும் எனவும் -

நல்லூர் பிரதேச செயலக கலாசார விழாவின்போது யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

(ஒ-111)

## ஓய்வூதியர் விவரங்கள் விரைவில் கணனிமயம்

தென்மராட்சி,ஜூலை13

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோரின் விவரங்கள் கணனி மயப்படுத்தப்படவுள்ளன.

ஓய்வூதியம் பெறுவோரின் முழு விவரங்களையும் பெறுவதற்காக இம்மாத ஓய்வூதிய வவுச்சருடன் தரவுப் படிவங்கள் இணைக்கப்பட்டுள்ளன எனவும் -

இப்படிவத்தினைப் பூரணப்படுத்தி பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாமெனவும் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(த-117)


## தேவை

எமது இணை நிறுவனமாக கரந்தனில் அமைக்கப்பட்டு வரும் ஆண்களுக்கான இல்லக் கட்டட வேலைக்கு அனுபவமுள்ள பின் வருவோர் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)
2. மேசன்மார்
3. கட்டடத் தொழிலாளர்கள்

மேற்படி பதவிகளில் சேர விரும்புவோர்

**"கருணாலயம்"** (சிறுவர் இல்லம்)
இராச வீதி, கரந்தன்

என்னும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும். அல்லது கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். (37645) (42-11-16)


## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்
1944 - 08 - 28



ஆண்டவன் அடியில்
1994 - 06 - 15

### அமரர் சீனியர் சுந்தரலிங்கம்

பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் உறைவிடமாய்- இருந்த
எங்கள் ஆருயிர் அப்பாவே!
எங்களை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பன்னிரண்டு ஆகியும் அப்பாவே!
நாங்கள் உங்களை மறக்கவில்லை.
அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.
(37596) (39-11-16-42)

பிரிவாற்றாமையால் வாடும்:
- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மகன் (றஞ்சன்).

## ஓராண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
12 – 06 – 1932



மறைவு
13 – 07 – 2004

முன்னாள் அதிபர்
அதிபர்

### அருட்திரு. அன்ரன் இராசநாயகம் அடிகளார்

இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரியில் 3 ஆண்டுகள் உபஅதிபராகவும் 13 ஆண்டுகள் அதிபராகவும் பணியாற்றிய அருட்திரு. *அன்ரன் திலகரட்ணம் இராசநாயகம* அடிகளாரின் இறைபதமடைந்த ஓர் ஆண்டு நினைவுத் திருப்பலி இன்று (13.07.2005) புதன்கிழமை காலை 8.45 மணியளவில் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் இடம்பெறும். திருப்பலியின் பின்னர் அன்னார் அவர்களின் புகழ்விளங்க கவிதை நூல்களின் அறிமுகவிழா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆன்மா இறைவனில் என்றும் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**புனித ஹென்றியரசர் கல்லூரிக் குடும்பம்**
**இளவாலை.**

(ச-42096) (42-11-16)


## மகளிருக்கான விசேட அலங்காரப் பயிற்சி வகுப்பு

தலைநகர் கொழும்பில் 8 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்தவரினால் மகளிருக்கான பயிற்சி வகுப்புகள் யாழ். நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நடைபெறவுள்ள பயிற்சிநெறிகள்:-

- Beauty Culture
- Dress Making
- Cake Making & Icing
- Structure
- Sugar Flower
- Painting (cut work, Net work, paint work, Giltter work, Dust work, Beads work, Cord work)

அனைத்து ஓடர்களும் எடுக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

காலம்: 2 மாதங்கள்
நடைபெறும் இடம்:
K.K.S. Road, உப்புமடம், கோண்டாவில் மேற்கு,கோண்டாவில்.
தொடர்பு: **0777 311403**

(சி/42014) (24-16-34-42)

# பனிச்சையடியில் குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி அவதி

பளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இயக்கச்சி - பனிச்சையடிக் கிராமத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் நெருக்கடிகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் 1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் முன்பு குடியிருந்த பகுதிகளில் இராணுவத்தினரால் மிதிவெடிகள், கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் இவர்களுக்குத் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்து வாழ்வதற்கான காணிகளை பளை உதவி அரச அதிபர் வழங்கியிருந்தார்.

இங்கு தற்காலிக குடிசைகளை அமைத்து இப்பிரதேச மக்கள் மீண்டும் முகாம் வாழ்க்கையே வாழ்ந்து வருகிறார்கள்.

நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வீதிகள் புனரமைப்பு, குடிதண்ணீர் வசதிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

கூடை பின்னி விற்றே தமது அன்றாட ஜீவனோபாயத்தை இவர்கள் நகர்த்துகின்றனர். இவர்களது வாழ்வியலைக் கட்டியெழுப்ப எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மீளக்குடியேறிய இவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்டது. அது வழங்கப்பட்டு 15 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் உலர் உணவு நிவாரணத்தை அரசு தற்போது நிறுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பளை, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்துக்கும் வேறு சில தரப்பினருக்கும் எடுத்துக்கூறியும் உரிய நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கூலித்தொழிலை மேற்கொண்டுவரும் இப்பகுதி மக்களின் துயர் துடைக்க நிவாரணங்களை வழங்கி நிரந்தரக் குடியேற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-352-204)




## புதிய பாலம் நிர்மாணிப்பு

கிளிநொச்சி சந்திரன் பூங்காச் சந்தியில் இருந்து இரத்தினபுரத்தினூடாகச் செல்லும் வீதியில் புதிய பாலம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மாரி காலங்களில் இப்பகுதியூடாக வீதியின் குறுக்காக பெருமளவு நீர் பாய்வதால் போக்குவரத்து முற்றாகத் தடைப்படுவதும் உண்டு. இதனால், இப்பாலம் அமைக்கப்பட்டமை இப்பகுதியூடாகப் போக்குவரத்துக்குப் பெரிதும் நன்மையளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இவ்வீதி புனரமைக்கப்படாததால் இப்பாலத்தின் பயன்பாடு பற்றி மக்கள் மனதில் கேள்வி எழுந்துள்ளது. எனவே, இது பற்றி உரியவர்கள் கவனம் எடுக்கவேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். (த)

## கிளிநொச்சியில் திருட்டு அதிகரிப்பு!

கிளிநொச்சி, ஜூலை13

கிளிநொச்சிப் பகுதியில் பரவலான முறையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் கிஸ்ணபுரம் கிராமப் பகுதியில் வீடொன்றில் வைக்கப்படிருந்த தண்ணீர் தாங்கியொன்று களவாடப்பட்டிருக்கின்றது.

இக்கிராமப் பகுதியில் இரவு வேளைகளில் இனம்தெரியாத நபர்களின் நடமாட்டம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அப்பகுதிமக்கள் காவல்துறையினரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

(த-305)

## கிளிநொச்சி செயலகத்துக்கு குப்பைகளால் அசௌகரியம்!



படங்கள் : வட்டக்கச்சி செய்தியாளர்

கிளிநொச்சி,ஜூலை13

கிளிநொச்சி அரச செயலகத்தின் இடது பக்க எல்லைப் பகுதி கழிவுப்பொருள்கள் கொட்டும் பகுதியாகவும் கழிவு நீர் வெளியேற்றப்படும் இடமாகவும் மாறி வருகின்றது.

இப்பகுதியில் பெருமளவு வியாபார நிறுவனங்களும் அருகில் தமிழீழ வைப்பகமும் காணப்படுகின்றன. இப்பகுதியில் இருந்து துர்நாற்றம் வருவதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் பலன் ஏதும்கிடைக்கவில்லை என இப்பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

மாவட்ட அரச செயலகத்தின் அருகிலேயே இவ்வாறான ஒரு நிலை காணப்படுமாயின் ஏனைய இடங்களில் உள்ள நிலைமைகளை யார் கவனிப்பார் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

(த-405)



முழங்காவில், இரணைமாதாநகர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் 7 ஆவது ஆண்டு விழா கடந்த மாதம் 16 ஆம் திகதி நடைபெற்றது.
இந்த ஆண்டு விழாவை முன்னிட்டு 2 கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.
இந்தக் கட்டடங்களுக்கான அடிக்கல்லை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தன் நடுவதைப் படத்தில் காணலாம்.
பூங்கா நிர்வாகி திருமதி வி.நிலாமதியும் படத்தில் உள்ளார்.
(படம்- வெள்ளாங்குளம் செய்தியாளர்).

கரும்புலிகள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட

## பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள்

கரும்புலிகள் நாளை முன்னிட்டு துணுக்காய் கோட்டக் கல்வி அலுவலகத்தினரால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தரம் 9**

முதலாமிடம் - ப.நிருஷா (யோகபுரம் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் இ.ரஞ்சன் (அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயம்), மூன்றாமிடம் - ப.லதீபன் (மல்லாவி மத்திய கல்லூரி).

**தரம் 10**

முதலாமிடம்- ச.சபிதா (யோகபுரம் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - கே. கேதார கௌரி (மல்லாவி மத்திய கல்லூரி), மூன்றாமிடம் - க.அபிராமி (யோகபுரம் மகா வித்தியாலயம்).

**தரம் 11**

முதலாமிடம் ச.துவாரகா (யோகபுரம் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் கி.கிருஷ்ணவேணி (துணுக்காய் அ.த.க.பாடசாலை), மூன்றாமிடம் ந.சதீசன் (மல்லாவி மத்திய கல்லூரி).

**உயர்தர வகுப்பு**

முதலாமிடம் - நா.துளசிதாஸ் (மல்லாவி மத்திய கல்லூரி), இரண்டாமிடம் கோ.லிகிதா (மல்லாவி மத்திய கல்லூரி), மூன்றாமிடம் - ந.சங்கர் (மல்லாவி மத்திய கல்லூரி).

(த-322)

## பால்நிலை சமத்துவப் பயிற்சிப் பட்டறை

வட்டக்கச்சி,ஜூலை13

கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தால் கரைச்சிக் கோட்ட ஆசிரியர்களுக்கான பால் நிலை சமத்துவப் பயிற்சிப் பட்டறை கடந்த 8ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நடத்தப்படுகின்றது.

'ஒக்ஸ்பாம்' நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஆதரவுடன் இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளிலிருந்து ஒரு ஆண் ஆசிரியரும் ஒரு பெண் ஆசிரியரும் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஒவ்வொரு கோட்ட ஆசிரியர்களுக்கும் என மூன்று சுற்றுக்களாக இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டு வருகின்றது. முதலாம் சுற்றில் ஏற்கனவே பூநகரி, பளை, கண்டாவளை, கரைச்சி ஆகிய கோட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. (த-405)

## பெற்றோரின் உதவியுடன் பாடசாலைக்கு சுற்றுமதில்

வட்டக்கச்சி,ஜூலை13

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் பெற்றோரின் நிதியுதவியுடன் சுற்றுமதில் அமைக்கப்பட்டு வருகின்றது. முதலில் பாடசாலையில் முன்புறத்தில் இம்மதில் அமைக்கப்பட்டு வருகிறது. இச்சுற்றுமதில் கட்டுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி வித்தியாலய அதிபர் க.இரத்தினகுமார் தலைமையில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது. இளைப்பாறிய ஆசிரியர் சுப்பிரமணியம் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இதுவரை 140 அடி மதில் கட்டுவதற்கான ஏற்பாடுகள் முடிவுற்று வேலை நடைபெறுவதாகவும் தொடர்ந்து இது சுற்றுமதிலாக அமையும் எனவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

(த-405)

# ஆனையிறவு உப்பளத்தைச் சர்வதேச தரத்துக்கு அபிவிருத்தி செய்ய நிறுவனங்கள் உதவவேண்டும்

## பொருண்மியப் பொறுப்பாளர் கரிகாலன் வேண்டுகோள்



பரந்தன்ஜூலை13

தமிழீழத்தின் தேசிய சொத்தாக விளங்குகின்ற ஆனையிறவு உப்பளத்தைச் சர்வதேச தரம் வாய்ந்த உப்பளமாக மாற்றி அபிவிருத்தி செய்வதற்கு நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்பு அவசியமானதாகும்.

- இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனப் பணியாளர்கள் தங்குவதற்கான விடுதிகள், பொதுமண்டபம் என்பனவற்றின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

மேற்படி விடுதித் தொகுதியைத் திறந்து வைத்து உரைநிகழ்த்திய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் மேலும் தெரிவித்ததாவது-

இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்ட இந்தப் பிரதேசத்தை எமது தேசியத் தலைவரின் மதிநுட்பமான தாக்குதல் வியூகத்தினால் மீட்டெடுத்துள்ளோம்.

இந்த உப்பளம் தமிழீழ வரலாற்றிலே முக்கிய இடத்தை வகிக்கிறது.

இந்த உப்பளத்திலே பணிபுரிகின்ற பெண் தொழிலாளர்கள் நாள் முழுவதும் கஷ்ரப்பட்டு உழைக்கின்றார்கள். அவர்கள் இரவிலே நிம்மதியாகத் தங்குவதற்கு வசதி செய்யவேண் டும் என்ற நோக்குடன் ஜி.ரி.சற் நிறுவனம் இந்த விடுதியை அமைத்துத் தந்துள்ளது.

இந்த நிறுவனத்திற்கு நிதி வழங்கிய ஜேர்மன் நாட்டு மக்களிற்கும் இந்த நிறுவனதிற்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனையிறவு உப்பினை எமது மக்கள் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் பயன்படுத்தகூடிய முறையில் வளர்ச்சி காணவைக்கவேண்டும். இதற்கு நிதியுதவி செய்யும் நிறுவனங்களின் பங்களிப்பு அவசியம் தேவை.

சர்வதேச தரம் வாய்ந்த ஆனையிறவு உப்பு தமிழீழத் தேசிய சொத்தாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இதற்கு சிறந்த உற்பத்தி முறை அவசியம். இங்கு மனித வளத்தைப் பயன்படுத்தியே உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த மக்களின் எதிர்கால நலனைக்கொண்டு ஆனையிறவு உப்பளத்தை விஸ்தரித்து உப்பு உற்பத்தியை அதிகரிக்க உதவும் நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

இங்கு நிரந்தரக் குடியிருப்பாளர்களாக இருந்து உப்பு உற்பத்தியை மேற்கொண்ட மக்கள் இன்று இடம்பெயர்ந்து அகதிகளாகி அல்லலுற்று வாழ்கிறார்கள். தூர இடங்களில் தங்கியிருந்தபோதும் இங்கு வந்து பணிபுரிகிறார்கள். இந்தப் பணியாளர்களின் நலன்கருதி உதவி புரிகின்ற நிறுவனங்களின் பணி பாராட்டப்படவேண்டியது - என்றார்.

தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தனது உரையில் தெரிவித்ததாவது-

நீண்டகாலங்களாக இந்த நிறுவனம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப பகுதியிலிருந்து இன்றுவரை இந்த நிறுவனம் சரியான வசதி வாய்ப்புகள் இன்றியே இயங்கி வருகின்றது.

இந்த உப்பு உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரிகின்ற பணியாளர்கள் தங்குவதற்கான விடுதிகளை அமைத்துக் கொடுத்திருக்கின்ற ஜி.ரி.சற் நிறுவனத்தினுடைய பிரதிநிதிகளுக்கும் அந்நிறுவனத்திற்கும் விடுதலைப் புலிகள் சார்பில் நன்றிகளை அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

ஏனெனில் இந்த ஜி.ரி.சற் நிறுவனமானது கடந்த காலப் பகுதியிலிருந்து இன்று வரை வடகிழக்குத் தாயகப் பிரதேசத்தில் இப்படியான பெரும் பணிகளைச் செயற்படுத்தி வருவதை நாங்கள் நன்கு அறிகின்றோம்.

அந்த வகையில் தான் நீண்டகாலப் பெரும் யுத்தத்தில் பல நூற்றாண்டுகளாக இந்த ஆனையிறவுப் பெரும் தளம் பல படைகளுடைய பலங்களில் இருந்து வந்தது.

எங்கள் தேசிய தலைவருடைய திட்டமிட்ட வழிகாட்டலில் இந்தத் தளம் மீட்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான போராளிகளினுடைய உயிர்த் தியாகங்கள் இந்தத் தேசத்திலே விதைக்கப்பட்டு இந்த ஆனையிறவுப் பெரும் தளம் மீட்கப்பட்டது.

எங்கள் வடகிழக்கு தாயகப் பிரதேசத்தில் ஒரு பெரும் தளமான இந்த ஆனையிறவுப் பிரதேசத்தில் இன்று அவர்களினுடைய அர்ப்பணிப்பு மிக்க தியாகத்தால் இன்று இங்கு மீண்டும் இந்த உப்பு உற்பத்திக்கான நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்கள் தேசியத்தின் பெரும் வளமாகத் திகழ்கின்ற இந்த உப்பு உற்பத்தியை எமது தேசியத் தலைவரினுடைய அந்த உயரிய சிந்தனைக்கு ஏற்ற வகையில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேலும் அபிவிருத்தி செய்யத் தயாராகி வருகிறது.- என்றார்.

(த-352)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கடை விற்பனைக்கு

வீதிச் சான்றிதழ் பெற்ற கடை. தொடர்பு: இல. 325, தியாகு கலைக்கூடம்,பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். **T.P.: 222 6469.** (37535)

## வீடு விற்பனைக்கு

சேச்லேன், மானிப்பாயில் 3 படுக்கை அறைகள், கிணறு, மின்சார வசதியுடன் (2 பரப்பில்) வீடு (உறுதி இல. 10855) விற்பனைக்குண்டு. தரகர் இன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். S.நாகரட்ணம் C/O நாயகம், சேச்லேன், மானிப்பாய்.
T.P.: 021-222 3278. (37654)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கெருடாவில் கந்தசாமி கோயிலுக்குச் சொந்தமான காணி நிலப் பரப்பு (15) மீசாலை வடக்கில் பூதவராயர் கோயிலுக்கு முன்பாக கிழக்குப் பக்கமாக உள்ளது பிரித்தும் தனித்தும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: திருமதி சிவஞானம், கெருடாவில், சாவகச்சேரி. (37642)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (**Electronic** நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (37451)

புறொயிலர் 1 Kg 160/- சுத்தம் செய்தது 240/- மொத்தமாகக் கொள்வனவு செய்பவருக்கு விலைக்கழிவு உண்டு. மற்றும் புறொயிலர் குஞ்சு விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm மான்ஸ் பாடசாலை வீதி உடுவில். New R.S.K Farm பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (3663)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 18.07.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை. சந்நிதி பாம்- தொண்டைமானாறு. ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி. நல்லூர் பாம் சென்ரர் - முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37452)

## வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் புத்தம் புதிய வீடு 6 அறைகள், 2 ஹோல் 2 Bath Room உடன் வாடகைக்கு உண்டு. (N.G.O ஆயின் விரும்பத்தக்கது) தொடர்பு: 0777 592625. (37519)

## அறை வாடகைக்கு

வாரத்தில் 7 நாள்களும் தங்கக்கூடிய ஆண்களுக்கு சிவன்கோயிலடி திருநெல்வேலியில் அறை ஒன்று வாடகைக்குண்டு. (Attach Bathroom Toilet) தொடர்பு: 198/ 9/ 1, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, **T.P.: 0773-248924.**
(C/42024)

## தவறிவிட்டது

ஊரெழு கணேஸ் ஜதர்சன் என்பவருடைய விசேட அடையாள அட்டை, லைசென்ஸ் என்பன 26.06.2005 அன்று ஊரெழுவுக்கும் அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இல.: 077 6242486 உடன் தொடர்புகொள்ளவும். (37657)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கஸ்தூரியார் வீதியில் பணத்துடன் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தயவுசெய்து 0776923705 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். அல்லது நவீன சந்தையின் உட்புறத்திலுள்ள அம்பிகாபதி பான்ஸி ரேடர்ஸ'க்கு வந்து பெற்றுக்கொள்ளவும். (37653)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1972 மிருகசீரிடம் முதலாம் பாதம் நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2644, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (37627)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன. தொடர்புகளுக்கு கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை. இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (37659)

## தேவை

சகல பாடங்களும் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
தொடர்பு:
(37622) **லைசன் உடுவில்.** (21-15-34)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் கவனத்திற்கு

1. மாகாணக் கல்வி அமைச்சுடனான எமது சங்க நேரடித் தொடர்பின் பின், வரையறுக்கப்பட்ட முதல் தொகுதிப் பட்டியல் இந்த வாரம் கொழும்பு செல்வதை உறுதிப்படுத்தியுள்ளதால் எமது சிபார்சுப் பட்டியலை ஒரு வாரத்தின் பின் கொழும்புக்குக் கொண்டு செல்லவுள்ளோம்.
2. பெரும்பான்மையோர் எமது பதிவிலக்கங்களை நேரில் பெற்றுள்ளமை மகிழ்ச்சி தருகிறது.
3. எமது பதிவிலக்கங்களை வைத்திருப்போர் கல்வியமைச்சின் முதல் தொகுதி நியமன அறிவிப்புக்கு முன்னும் பின்னும் தமது பிரச்சினைகளை எமக்கு அறிவிக்க முடியும்
இருவாரத்தின் பின் முயற்சிக்கக் கூடிய தொலைபேசி எண்.: 021- 222 8288
உடன் தொடர்புக்கு: 077- 6114068

தலைவர் சி.ஞானாகரன்
வடக்குக்கிழக்கு மாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் சங்கம் (NEP)
60, சிறீராம் தொழிற்சாலை வீதி
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அருகில்
கோப்பாய் தெற்கு. (37660)(21-15-34)

## புதிய நிர்வாகம் தெரிவு

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட சன சமூக நிலையங்களின் சமாசத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இந்த சமாசத்தின் புதிய தலைவராக சி.அருணாசலமும் செயலாளராக ச.தங்கராசாவும் பொருளாளராக சி.இராசேஸ்வரியும் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஒன்பது பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ)

## திறப்பு விழா

இன்று (13.07.05) புதன்கிழமை காலை
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டையில்

**கார்த்திகா பாமசி & குறோசரி**

எனும் ஸ்தாபனம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.
உரிமையாளர்
சி.இரத்தினசோதி (37666) (21-15-34)
'பொன்னையா சதுக்கம்'
குளிப்பன் வீதி, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை.



உ
## சுருவில் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயானார் கோயில்
## தேர்த்திருவிழா

14.07.2005 வியாழக்கிழமை
காலை 8 மணிக்கு அபிசேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி 10மணிக்கு வசந்த மண்டப் பூசை நடைபெறும். பின்னர் முற்பகல் 11 மணிக்கு ஐயனார் திருத்தேரில் ஆரோகணித்துக் காட்சி தருவார்.
15.07.2005 வெள்ளிக்கிழமை
காலை 10 மணிக்கு கடலில் தீர்த்தோற்சவம்
16.07.2005 சனிக்கிழமை மாலை திருக்கல்யாணம் இடம்பெறும்.

அடியார்கள் வருக! ஐயப்பன் அருள் பெறுக.

(37641)(21-15-34) ஆலய நிர்வாகத்தினர்

உ
## இணுவில் கந்தசுவாமி கோயில் ஆதனங்கள் தொடர்பான அறிவித்தல்

மேற்படி ஆலயத்திற்கு சொந்தமான, பரிபாலனத்திற்கான அடியார்களால் நன்கொடை எழுதப்பட்ட ஆதனங்களில் குடியிருப்பவர்கள், விவசாயம் செய்வோர், பராமரிப்பவர்கள் ஆதனங்களின் விபரங்கள் தொடர்பான சகல விடயங்களையும் கோயில் தர்மகர்த்தா சபையிடம் (கோயில் காரியாலயத்தில்) கையளிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். குறித்த ஆதனங்கள் ஆலயத்திற்கு சொந்தமானவை என்பதை உணர்ந்து கொள்ளவும்.

**பின்வரும் விடயங்களை தங்களின் கவனத்திற்குஎடுத்துக் கொள்ளவும்**

1. குடியிருப்புகாணிகள் தற்காலிக வீடுகள் அமைப்பதற்குமட்டும் வழங்கப்பட்டது.
2. சபையின் அனுமதி இன்றி நிரந்தர (கல். சீமெந்து) வீடுகள் கட்ட அனுமதிக்கப்படமாட்டாது. கட்டியவர்கள் முன்னாள் சபையிடம் அனுமதி பெற்றிருந்தால் அக்கடிதத்தின் பிரதியை சமர்ப்பிக்கவும்.
3. குடியிருப்பாளர்கள் சபையின் அனுமதியின்றி வேறு நபர்களுக்கு காணியை மாற்றம் செய்யக் கூடாது.
4. பலவருடங்களாக சிலர் குத்தகைப்பணம் கட்டவில்லை. பணம் கட்டாதவர்கள் ஏற்ற ஒழுங்குகளை செய்யவும். பணம் கட்டியவர்கள் பற்றுச் சீட்டின் பிரதிகளைச் சமர்ப்பிக்கவும்.
5. ஆலயத்திற்கு உரிய காணிகளில் உள்ள மரங்களை வெட்டவோ, அல்லது விற்கவோ முடியாது.

**மேற்குறிப்பிட்ட விவரங்களை 2005 ஆம் ஆண்டு ஆவணி (ஒகஸ்ட்) மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கோயில் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.**

இ.ஆறுமுகம் தலைவர் — ஏ.சி.சண்முகலிங்கம் பொருளாளர் — செ.சோதிப்பெருமாள் செயலாளர்.
க.நடராசா உபதலைவர் — செ.செல்வநாயகம் உபசெயலாளர்.
உறுப்பினர்கள்: பொ.துரைராசா, இ.அருணகிரிவாசன், உ.அபராஜிதக் குருக்கள், சு.சிவகுமாரன்.

தர்மகர்த்தா சபை,
(37643) (39) இணுவில் கந்தசாமி கோயில், சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### செல்லத்துரை பிரான்சிஸ் பற்றிக்

எமது மன்றத்தின் நீண்டகாலப் பணியாளன் செல்லத்துரை பிரான்சிஸ் பற்றிக் அவர்கள் கடந்த 11.07.2005 அன்று காலமானார் அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் பிரிவால் துயருறும் அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் ஆத்மா சாந்தியடைக!

சட்டநாதர் வீதி,
நல்லூர். (37669)(21-15-34) **இலங்கலைஞர் மன்றத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றி 11.07.2005 அன்று ஓய்வுபெற்ற
அதிபர் உயர்திரு
### அ.பேரம்பலம் (S.L.P.S -I)

அவர்களின் சேவைநலனைப் பாராட்டி நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.
(37635) (21|-34-15) பாடசாலைச் சமூகம்.

## தேவை

வட்டுக்கோட்டையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பாமசிக்கு (Pharmacy) அனுபவமுள்ள பெண் ஊழியர் உடன் தேவை. இத்துறையில் வேலை பழக விருப்பம் உள்ளவர்களும் விரும்பப்படுவர். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 0776118212, 0773288795
உரிமையாளர் முகவரி
சி.இரத்தினசோதி,
(37635) 'பொன்னையா சதுக்கம்' (21-34-15)
குளிப்பன் வீதி, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை.

## வைத்தியம்

நோய்களுக்கேற்ற வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் வழங்கப்படும். மற்றும் பல்கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடுதல் என்பன செய்து கொடுக்கப்படும்
நிர்வாக இயக்குநர்
**Dr.M.T கமலசிங்கம் MD.(Doctor Of Medicine)**
**THE OPEN INTERNATIONAL UNIVERSITY**
**R.M.P Regd No. 10341 & D.A.M.(Shrilanka)**
பரம்பரை மருத்துவரும், அனுபவம் வாய்ந்தவருமாவார்

### சென்றல் வைத்தியசாலை
(21-34-15) **யாழ்ப்பாண வீதி , உடுப்பிட்டி.** (37561)

## கண்ணீர் அஞ்சலி



சித்தன்கேணி டச்சுவீதியைப் பிறப்பிடமாகவும் இல.7, கொழும்பு - 6 நிஹால் சில்வா மாவத்தையை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட T.N.N. நடமாடும் வாணிபம் உரிமையாளர்

### துரைராஜா நாகநாதன்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**T.N.N**
(37639)(21-34-15) (ஊழியர்கள்).

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான

### இராஜரத்தினம் விஜயகுமார்
(கோப்பாய் விஜி)

(உரிமையாளர் **Naturelanka Travel Tours Colombo**)

அவர்கள் 10.07.2005 இல் திடீர் மரணமடைந்தார். அவரது மறைவு எமக்குப் பேரதிர்ச்சியையும் கவலையையும் அளித்துள்ளது. பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ கோப்பாய் மகாவித்தியாலயம் — அதிபர், ஆசிரியர்
கோப்பாய். — மற்றும் கல்விச் சமூகத்தினர்.
(37632)(21-15-34)

## மரண அறிவித்தல்

### வயிரவப்பிள்ளை சின்னத்தம்பி

வயாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் வத்தானைப்புலம் கருகம்பனையை வதிவிடமாகவும் தற்காலிகமாக நாக்கியம்புலம் ஏழாலை மேற்கில் வாழ்ந்தவருமான வயிரவப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் நேற்று (12.07.2005) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறையடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற வயாவிளானைச் சேர்ந்த வயிரவப்பிள்ளை முதலியப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற செல்லத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளை நாகேந்திரம் ஆசைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பு மற்றும் இராசையா நடராசா செல்லத்துரை (இளைப்பாறிய அதிபர்) , பொன்னுத்துரை (இளைப்பாறிய அதிபர்), பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), லலிதாம்பிகை , நகுலாசலபதி (பிரான்ஸ்), ஆகியோரின் அருமைத் தந்தையும் யோகேஸ்வரி (பிரான்ஸ்), உதயகுமார் (ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை), கார்த்திகா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும் குமரகுருபரன் குறிஞ்சி, ரதி ஆகியோரின் பேரன்புக்குரிய பேரனும் பாலசிங்கம் மனோன்மணி காலஞ்சென்ற சரஸ்வதியம்மா ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் ஏழாலை மேற்கில் உள்ள லலிதாம்பிகையின் இல்லத்தில் இன்று (13.07.05) புதன்கிழமை காலை நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகச் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நாக்கியம்புலம், — இராதாகிருஷ்ணன், லலிதாம்பிகை நகுலாசலபதி
ஏழாலை. (37670)(21-15-34) — பிள்ளைகள்

# அஸ்ரா கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## சென்.பற்றிக்ஸ் வென்றது

யாழ்ப்பாணம்,ஜூலை13

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் மகாஜனக் கல்லூரி அணிக்கும் இடையிலான 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

கவித்தன் 8 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார். லுட்சன் மூன்று விக்கெட்டுக்களையும் கொலின், விதுபாலா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தினை இடை நிறுத்திக்கொண்டது.

யதிஸ்வரன் 69 ஓட்டங்களையும் லுட்சன் 39 ஓட்டங்களையும் ஜக்சன் 36 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

குகநேசன், யசித்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இரண்டாவது இன்னிங்ஸில் மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து84 ஓட்டங்களைப் பெற்றது.

கவித்தன் 21 ஓட்டங்களையும், ஜெயச்சதன் 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர். விதுபாலா, லுட்சன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (3-190)

## 15 வயதுப் பிரிவில் சென்ரல்

யாழ்ப்பாணம்,ஜூலை13

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதிய 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கடந்தவாரம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

மிலோசன் 55 ஓட்டங்களைப் பெற்றார். மயூரன், சிவகரன், கோபிகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஸ்ரீபன், ராஜி 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது.

ஜேம்ஸ் யோண்சன் 31 ஓட்டங்களையும் மயூரன் 23 ஓட்டங்களையும் ரதீகன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். சனுபோகன், ஜெனிபர் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (3-190)

# கே.ஸி.ஸி.ஸி. கிண்ண கிரிக்கெட்

## கொக்குவில் வி.க. வெற்றி!

வலி.வடக்கு,ஜூலை13

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் பல்கலைக்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது.

துஷ்யந்தன், சயந்தன் ஆகியோர் முறையே 65, 35 ஓட்டங்களைத் தமது அணிக்காக பெற்றனர். ஜெயரூபன், சுபாஸ், பாஸ்கரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை மட்டும் பெற்றது. சிவாஸ், சுபாஸ் முறையே 27,41 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் வினோஸ்கரன், றோபேசன் ஆகியயோர் தலா 3 விக்கெட்டுக்களையும் உமாநாத், கிருபாகரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.(3-86-190)

## சென்றலைட்ஸ் வி.க. வெற்றி!

யாழ்ப்பாணம்,ஜூலை13

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றனர்.

மதுசன் 41 ஓட்டங்களைப் பெற்றார். டானியல், மதியழகன், திலீபன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும் ஜனகரன் 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்கோல்ட்ஸ் வி.க. அணியினர் 97 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தனர்.

நிரோசன், பிளோஸ் ஆகியோர் முறையே 25, 20 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பிரகாஸ், சாள்ஸ் ஆகியோர் முறையே 6, 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.(3-190-86)

## யங்ஸ்ரார் அணி வெற்றி!

யாழ்ப்பாணம்,ஜூலை13

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் வி.க.அணி 22 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெனஸ் 29 ஓட்டங்களையும் குமாரறூபன் 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். கிருஸ்ணச்சந்திரன் 3 விக்கெட்டுக்களையும் சுஜிபன், டினேஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் வி.க.அணி 16 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.துஷ்யந்தன் 38 ஓட்டங்களையும் விஜயகர்ணன் 17 ஓட்டங்களையும் டினேஸ் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

குமாரறூபன் 3 விக்கெட்டுக்களையும் வரத்திரன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (3-190)

## பற்றீஸியன்ஸ் 270 ஓட்டங்கள்!

யாழ்ப்பாணம்,ஜூலை13

பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டம் ஒன்றில் பற்றீஸியன்ஸ் வி.க வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீஸியன்ஸ் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றது.

சுதர்சன் 34 ஓட்டங்களையும், றஜீத் 32 ஓட்டங்களையும், செச்சில் 78 ஓட்டங்களையும், சுஜீவன் 31 ஓட்டங்களையும், வினோதன் 34 ஓட்டங்களையும் பெற்றனர். திலீபன், சிறிதரன், மயூரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் வி.க அணியினர் 8 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களை மட்டும் பெற்றது. மயூரன் 44 ஓட்டங்களையும் தனஞ்சேயன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். றஞ்சித், முகுந் தன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களும் வினோதன், சுஜீவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். (3-190)

# இலங்கை - மே.இந்தியா இடையே கிரிக்கெட் டெஸ்ட் இன்று ஆரம்பம்

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பின் இலங்கையில் முதல் முறையாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை தொடங்குகின்றன. கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஆழிப் பேரலையால் தெற்காசிய நாடுகள் பாதிக்கப்பட்டன. இலங்கையில் பலத்த சேதம் ஏற்பட்டது. அப்போது நியூஸிலாந்து சுற்றுப்பயணம் சென்றிருந்த இலங்கை அணி தொடரை ரத்துச் செய்துவிட்டு உடனடியாக நாடு திரும்பியது. இதன் பின் 7 மாதத்திற்குப் பிறகு இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் முதல் போட்டியை சந்திக்கவுள்ளனர். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கொழும்பில் இன்று தொடங்குகிறது. இலங்கை அணியின் 150ஆவது டெஸ்ட் போட்டி இதுவாகும்.

இரண்டு ஆட்டங்களைக் கொண்ட இத் தொடரில் பங்கேற்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் முன்னணி வீரர்கள் பலரும் இடம் பெறவில்லை. மேற்கிந்தியத் தீவின் கிரிக்கெட் சபையுடன் விளம்பர ஒப்பந்தம் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டதால் லாரா உட்பட முன்னிலை வீரர்கள் அணியில் இல்லை. 86 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனுபவத்துடன் சிங்நாரன் சந்தர்போல் மேற்கிந்திய அணிக்குத் தலைமை தாங்குகிறார். இந்த அணியில் 6 பேர் புதுமுகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# உலகக் கரபந்தாட்டப் போட்டி; பிரேஸில் அணியினர் 'ஹட்ரிக்' வெற்றி

உலக கரபந்தாட்டச் சம்பியன் பட்டத்தைத் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகக் கைப்பற்றியது பிரேஸில்.

செர்பியா - மான்டினிக்ரோவில் உள்ள பெல்கிரேட் நகரில் உலக கரபந்தாட்டப் போட்டிகள் நடந்தன. இதன் இறுதியாட்டத்தில் ஒலிம்பிக் சம்பியனான பிரேஸில், செர்பியா - மான்டினிக் ரோவை எதிர்த்து விளையாடியது.

இந்தப் போட்டியில் 14:25, 25:14, 25:19, 25:16 என்ற கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது பிரேஸில்.

உலக கரபந்தாட்டச் சம்பியன் பட்டத்தை தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகக் கைப்பற்றி 'ஹட்ரிக்' சாதனை படைக்கிறது பிரேஸில் அணி. ஐந்தாவது முறையாக இந்தப் பட்டத்தைப் பிரேஸில் கைப்பற்றுகிறது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் கியூபா அணி 25:23, 22:25, 24:26, 25:18, 15:13 என்ற கணக்கில் போலந்தை வென்றது. (ஒ)

# உடுவில் மகளிர் கல்லூரி அணிகள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு



மாகாண மட்ட வலைபந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 17 வயதுப்பிரிவு அணி யூனியன் கல்லூரி அணியை 26:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று தேசிய மட்டத்திற்குத் தெரிவானது.



மாகாண மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 19 வயது அணி கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் விளையாடி இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவானது. (3)

# இன்றைய ஆட்டங்கள்

கைதடி,ஜூலை13

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தனது விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு இணுவில் கலாஜோதி வி.கவும், நாவற்குழி அருள் வி.கவும் மோதுகின்றன. (3-75-203)

* * *

கைதடி,ஜூலை13

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 40ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்தப்பட்டு வரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

- இரவு 8 மணி - பிரதீப் வி.க எதிர் பாரதி வி.க.
- இரவு 9 மணி - கைதடி வளர்மதி வி.க எதிர் அச்சுவேலி விஷ்ணு வி.க (3-75-203)

* * *

தென்மராட்சி விளையாட்டுத்துறை, யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் தென்மராட்சி தாச்சிச் சங்கம் தென்மராட்சி ரீதியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு கைதடி சரஸ்வதி வி.கவும் மின்னொளி வி.கவும் மோதுகின்றன. (3-75-203)

அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகப்பெருமான் ஆலய

# சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா

இன்று நடைபெறுகின்ற சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துவோர்:

கிருஷ்ணானந்தம் பல்பொருள் வாணிபம்
மத்திய சந்தை,
நெல்லியடி.
T.P.: 226 3216

ஸ்ரீகிருஷ்ணா கிறீம்ஹவுஸ்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
T.P.: 226 3282

செல்லமுத்து புடைவை மாளிகை
நெல்லியடி,
கரவெட்டி.
T.P.: 226 3238

சதாபோன்ஸ்
அல்வாய்.
T.P.: 226 3206

தங்கம்ஸன்
நெல்லியடி,
கரவெட்டி.
T.P.: 226 3205

ஜமுனா ஸ்ரோர்ஸ்
தம்ரோ தளபாட விற்பனையாளர்கள்
நெல்லியடி, கரவெட்டி.
T.P.: 226 3217

நெல்லை சில்க்
நெல்லியடி.
T.P.: 226 3207

**அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகப்பெருமான் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல விநாயகரான அவனருளையே வேண்டிநிற்கின்றோம்.**

## வைஷ்ணவி நகைப்பூங்கா

## VYSNAVY NAGAI POONKA

23


பிரதான வீதி, நெல்லியடி

MAIN STREET, NELLIADY

(சி/42026) (24-16-11)

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் விஜயகுமார்



கோப்பாய் தெற்கு, இருபாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் விஜயகுமார் (கோப்பாய் விஜி - நிறைவேற்றுப் பணிப்பாளர், Nature Lanka Travels & Tours (Pvt) Ltd. - Colombo-6) 10.07.2005 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை இராசரத்தினம் - ஞானேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் நாகலஷ்மியின் அன்புக் கணவரும் விமேஷ், லஷ்சிதா, விஜிதா, லஷ்மிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகபூசணி அம்மா, இராஜசேகரம், காலஞ்சென்ற ரவிந்திரகுமார், புஸ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தெய்வானைப்பிள்ளை அவர்களின் மருமகனும் கிருஸ்ணசாமி, காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி, கிருஸ்ணகோபால், கிருஸ்ணதேவன் நாகரத்தினம் நாகேஸ்வரி, நாகபூபதி, நாகபுஸ்பம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2005) புதன்கிழமை மொறட்டுவ B-5,G#,சொய்சாபுரம் தொடர்மாடியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று இரவு அவரது சொந்த ஊரான யாழ்ப்பாணம், இருபாலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

14ஆம், 15ஆம் திகதிகளில் இருபாலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காகப் பூதவுடல் வைக்கப்பட்டு 15-07-2005 வெள்ளிக்கிழமை ஒரு மணியளவில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பி.ப 2.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**தொடர்பு:**
**0112 - 637024**
**யாழ்.: 0777 - 515834**
**0779 - 174074**

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்,
சகோதரி நாகபூசணி அம்மா.
(சி-42031) (24-19-11)

## பதவி வெற்றிடம்

**இலங்கையின் காப்புறுதி நிறுவனங்களில் பிரசித்தி பெற்றதும் முன்னோடியாகத் திகழ்வதுமான யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட் மிகப்பெரிய அளவில் யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக ஆயுள் காப்புறுதிக்குப் பிரதேச ரீதியாகக் காப்புறுதிப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய முன்வந்துள்ளது.**

அடிப்படைத் தகைமைகளாக:-
G.C.E. O/L சித்தி, அதற்கு மேற்பட்ட
அத்துடன்.....

★ சமூக மற்றும் வியாபாரத் தொடர்புகள்
★ கடினமாக உழைக்கும் தன்மை
★ தேக ஆரோக்கியம்

**என்பன மேலதிக தகைமைகளாகக் கொள்ளப்படும்.**
**மேலும் இத்துறையில் ஏற்கனவே அனுபவமுள்ளவர்களும் உள்வாங்கப்படுவர்.**

***இத்துறையில் வசதிகளாக....***

- உங்களது திறமைக்கேற்ற வகையில் சம்பளம் (வரையறுக்கப்படாத வருமானம்)
- இலகு கடன் வசதி (கார், மோட்டார்சைக்கிள்)
- பெறுமதியான இலவச ஆயுள் காப்புறுதி
- உங்களது திறமை - அனுபவ அடிப்படையில் குறுகிய காலத்தில் பதவியுயர்வுகள்
- ஏராளமான போட்டி வாய்ப்புகள்

போன்ற இன்னும் பல நன்மைகள் கிடைக்கும்.
அனைவரும் நேர்முகத்தேர்வின் மூலமே தெரிவுசெய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் அனைவருக்கும் இக்காப்புறுதித் துறையில் திறமைவாய்ந்த அதிகாரிகளின் மூலம் பூரணமான பயிற்சிகள் (தொழில்நுணுக்கங்கள், வியாபார உத்திகள், வாடிக்கையாளர் சேவை) வழங்கப்பட்டு வேலையில் உள்வாங்கப்படுவர்.

★ யூனி யன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட் பாரிய அளவில் மேற்கொள்ளும் நேர்முகத்தேர்வு என்பதால் இதில் ஏராளமானோர் உள்வாங்கப்படுவர்.

எனவே......
*நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் (15-07-2005) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும்.*

*வரும்போது உங்கள் சுயவிவரக்கோவையுடன் சமுகமளிக்கவும்.*

(சி/42030) (24-16-11)

## UNION ASSURANCE

139, Stanly Rd., Jaffna. T.P.: 021 222 3753



உ
சிவமயம்

## பாஷாண உத்வாசன சபிண்டீகரண (கல்லெடுப்பு) அழைப்பு

**அன்புடையீர்!**

கடந்த 03.07.2005 பார்த்திப வருடம் ஆனிமாதம் 18ஆம் நாள் சனிக்கிழமை இரவு சிவபதமடைந்த எமது தந்தை

## சிவஸ்ரீ க. ஈஸ்வரக்குருக்கள் அவர்களின்

பாஷாண உத்வாசன (கல்லெடுப்பு) கிரியை இன்று (13.07.2005) பார்த்திப வருடம் ஆனித்திங்கள் 29ஆம் நாள் (13.07.2005) புதன்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும். நாளை (14.07.2005) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் சபிண்டீகரணமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.239, பிறவுண்றோட், யாழ்ப்பாணம். (37690) (38-14-45)

மனைவி ஈ. நாகபூசணி அம்மா, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## வினாசித்தம்பி சிவஞானசுந்தரம்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



பருத்தித்துறை, புலோலி தெற்கு, புலோலி உபய கதிர்காமத்தைச் சேர்ந்தவரும் ஓய்வு பெற்ற தபால் அதிபருமான வினாசித்தம்பி சிவஞானசுந்தரம் அவர்கள் 10.07.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2005) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உபய கதிர்காமம்,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*

தகவல்:
குடும்பத்தினர்.

(37677)(14-45-38)

## திருமதி இராயப்பு மரியமுத்து (நேசம்)



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கைத்தொழில்பேட்டை வீதி, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராயப்பு மரியமுத்து 05.07.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை இராயப்புவின் (பொன்னுத்தம்பி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகி (அன்பு), நீக்கிலாப்பிள்ளை, திரேசம்மா (பொன்னு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்ரனி மரியதாஸ், செபோல்ட் (தவராஜா - பிரான்ஸ்), றோஸமலர் (வசந்தி), அல்பேட் ஜெயராஜா (லண்டன்), காலஞ்சென்ற புனிதமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராணி, ஜெயந்தினி (பிரான்ஸ்), பாலேந்திரா, எமிலியா றோஸ்மலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அற்புத மலரின் சிறிய தாயாரும் காலஞ்சென்றவர்களான வைத்தியாம் பிள்ளை, இரத்தினம், பேரின்பநாயகம் மற்றும் எலிசம்மா, அமிர்த நாயகம், பிலோமினா (செல்லக்கிளி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அன்ரன் பிரான்சிஸ், சைலஜா, பவான் (பிரான்ஸ்), சுயாத்தா (பிரான்ஸ்), அன்ரன் ரஜீவ் (NIIT மாணவன்), உதயன் (பிரான்ஸ்), சிபாணி (இந்தியா), டனீசியஸ், தர்சன், டன்ஸ்ரன் (பிரான்ஸ்), சாறா (பிரான்ஸ்), சபின் (லண்டன்), எவ்லின் (லண்டன்), கெவின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜனு, செபோன், செறோணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2005) புதன்கிழமை பகல் 11 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத் திருப்பலியின் பின் சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-42024)(14-45-38)

**தகவல்: பிள்ளைகள்**

**077-6012995, 077-3024246, 077-6057177.**

## திருமதி மயில்வாகனம் நேசம்மா

*(மாகியப்பிட்டி)* -



பெரியவிழானைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் நேசம்மா 10-07-2005 ஞாயிற்றுக்கிழமை இறைபத மெய்தினார்.

அன்னார் திரு.திருமதி அம்பலவாணர் - செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாரும் திரு.திருமதி சிவக்கொழுந்து - பாக்கியம், கந்தசாமி - குணமணிதேவி, சிவசுப்பிரமணியம் இராசமலர், கிருஷ்ணர் மனோன்மணி ஆகியோரின் சகோதரியும் (அமரர்களான அமிர்தலிங்கம், யோகராணி, பத்மநாத பிள்ளை) தெய்வேந்திரம் இராசேந்திரம், இந்திராணி (கனடா), நாகேந்திரன் (இத்தாலி), வனஜராணி, கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 13-06-2005 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, அதன் பின்பு பூதவுடல் அளவெட்டி தெற்கு, பத்துப்பனை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*மாகியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.*
(37674) (24-14-45-38)

தகவல்:
ம.தெய்வேந்திரம்
(மகன்).

## விளையாட்டு விழா

வண்ணார்பண்ணை பாலர் பாடசாலையின் 13 ஆவது வருடாந்த விளையாட்டுவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வள்ளுவன் சன சமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை ஆசிரியை திருமதி வளர்மதி சத்தியதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொதுசுகாதாரப் பரிசோதகர் க.தெய்வேந்திரமும் சிறப்பு விருந்தினர்களாக பாலர்கல்விக்கழகத் தலைவர் திருமதி சரோஜினி ஜெயபாலசிங்கம், பாலர் கல்விக் கழகப் போசகர் வ.கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர். (3-203)


**நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை வகுப்புகள் நடைபெறுகின்றன**

பொதுவிவேகம் பொது அறிவு
கட்டுரையும் சுருக்கமும்

**D.M.I** - பிரிவு I செவ்., புதன், வியாழன் 4-30 - 6.30
*யாழ்நகர்.* பிரிவு II சனி 3- 6 ஞாயிறு 8-11
**கிறிஸ்ரல்** *நெல்லியடி.* ஞாயிறு 3-6

**விற்பனைக்கு**

மலிவு விலையில் நொக்கியா
3310 கையடக்கத்
தொலைபேசிகள்

**றொப் மல்ரி ரேட் சென்ரர்**
இல. 11/1, செங்குந்தா மார்கட், (37676) (14-45-38)
நல்லூர்.

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

Lecturesby:- MR.M.A.HARI
★ புதிய பிரிவு ஆரம்பம்
13.07.2005 புதன் மாலை 5.30 மணி
WED. THU. 5.30p.m. - 6.30p.m.
(37678) (14-45-38)

**HARY'S INSTITUTE**
இல. 564, கஸ்தூரியார் வீதி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்), யாழ்ப்பாணம்.

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
**6'.2"** (ரீலஸ்)
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
வெகுவிரைவில் அர்ஜுன், சினேகா நடித்த **சின்னா**
(சி-43363)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
சுப்ப ஸ்ரார் விஜயசாந்தியின்
**சூர்யா** (ரீலஸ்)
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே).

**ராஜா யாழ்ப்பாணம்**
*கடைசி வாரம்*
**சந்திரமுகி** (ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
15.07.2005 முதல் **கற்க கசடற**


## விண்ணுலக வாழ்வின் ஓராண்டு நிறைவு

### அருட்தந்தை அன்ரன் இராசநாயகம்

தோற்றம் 12-06-1932 மறைவு 13-07-2004

இவருடைய குருத்துவ பணிகளுக்காகவும் சீரிய நல்வாழ்வுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். தமது அடியானுக்குப் பேரின்ப மகிமை அருள இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நன்றியோடு நினைவு கூரும்
சகோதரக் குருக்கள் –
குடும்பத்தினர்.

(37689) (14-45-38)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் அருணகிரிநாதன் (ராசன்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அருணகிரிநாதன் (ராசன்) அவர்கள் நேற்று (12.07.2005) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

தகவல்:
கருணாநிதி
(கரன்).

(37691) (24-14-45-38)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எல்லாம்வல்ல
கோண்டாவில் ஸ்ரீ பாரதிபுரம்
ஸ்ரீ புவனேஸ்வரி
அம்பாளின் நற்கருணை
மக்களுக்குக் கிட்டுவதற்கு
வழிவகுத்துத் தந்த
எங்களின் அன்புக்கும்
பெருமதிப்புக்குமுரியவரான

### உயர்திரு. பொன்னு சிவராசா

அவர்களையும்
அவரது குடும்பத்தினரின் சேவையையும்
மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதில்
பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

- ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையின் மைந்தர்கள்.

(37658) (24-14-45-38)

## நன்றி நவில்கின்றோம்

எங்கள் அழைப்பை ஏற்று இம்மாதம் 4ஆம் திகதி யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற யாழ். ஆயர் தினவிழாவில் பங்குகொண்டு விழாவைச் சிறப்பித்த பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் யாழ். ஆயர் சார்பிலும் எமது மறைக்கல்வி நடுநிலையத்தின் சார்பிலும் உளம்நிறைந்த பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பணிப்பாளர்,*
*மறைக்கல்வி நடுநிலையம்,*
*யாழ்ப்பாணம்.*

(37671) (24-14-45-38)

## பிறந்தநாள் நினைவஞ்சலி



சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட
அமரர்
பரநிருபசிங்கம் விஜயரத்தினம் ரவிச்சந்திரன்

அன்புசேர் பண்பாலும் நல்லுழைப்பாலும்
பேரோங்க வாழ்ந்த எம் மாமாவே!
மறைந்து ஈரேழு நாளானாலும் – எம்
ஈரவிழி நீர் சுமந்து, ஆறவில்லை நெஞ்சமது.
உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்னையின் மடியில் 13 - 07 - 1964
ஆண்டவன் அடியில் 01 - 07 - 2005

*12, தபாற்கந்தோர் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தாய், சகோதரர்கள், சகோதரிகள்
மைத்துனர்கள், மருமக்கள்,
பெறாமக்கள்.

## நெஞ்சகலாத நினைவஞ்சலி

45 ஆம் ஆண்டு — 15 ஆம் ஆண்டு



தோற்றம் 22 - 07 - 1913 மறைவு 02 - 07 - 1960

அமரர் நாகலிங்கம்
திருஞானசம்பந்தர்
[முன்னாள் ஆசிரியர் மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை]



தோற்றம் 23 - 08 - 1920 மறைவு 01 - 07 - 1990

திருமதி திருஞானம்பந்தர்
யோகாம்பிகை
[இளைப்பாறிய ஆசிரியை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்]

**திதி - 13.07.2005**

எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காத
நினைவுகளுடன் ...

*மீசாலை.* (37679)(14-45-38) -குடும்பத்தினர்.




ஸ்ரீ ஏணியில் எர்ரம்மாள் துணை

**இந்திய பரம்பரை ஜோதிடர்**

அருள்வாக்கு **அம்பிகா அம்மா** அவர்கள்
மீண்டும் **யாழ் புண்ணிய பூமிக்கு** வருகை

**கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்**

உங்களது எதிர்காலப் பலாபலன்களைத் தெளிவாக அறிந்து கொள்ளவும். உங்களுக்கு உள்ள எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் கஷ்டங்கள், துன்பங்கள் ஆனாலும் அதில் இருந்து மீண்டு உங்கள் வாழ்க்கையை சுபீட்சமாக அமைத்துக் கொள்ளவும் இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்தித்து அறிந்து கொள்ளுங்கள்

சனி மற்றும் வியாழன் மாற்றம் உங்களுக்கு எப்படி? என்பதனையும் அறிந்து கொள்ளவும் ஒருமுறை அருள்வாக்கு அம்மாவை நேரில் சந்திக்கவும்.
அம்மாவை சந்திக்கும் இடம்:-

**அருள்வாக்கு அம்பிகா அம்மா**
121, கஸ்தூரியார் வீதி,
ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ்,
(புதிய லிங்கன் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம்.
(37545) (54-34-19)



# வித்துடல்கள் விதைப்பு

சம்பூர்,ஜூலை13

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை, செல்வநாயகபுரத்தில் இனந்தெரியாதவர்களின் தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிப்போராளிகளினதும் தேசிய துணைப்படை வீரரதும் வித்துடல்கள் நேற்று ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப் பட்டன.

நேற்றுமுன்தினம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்த வித்துடல்கள், மாலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன. நேற்றுக்காலை முதல் அவை அங்கு பல்வேறு இடங்களிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

இறுதியாக சேனையூர் மத்திய மகா வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட வித்துடல்கள், அங்கிருந்து ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

மாலை 5.30 மணியளவில் வித்துடல்கள் அனைத்தும் துயிலும் இல்ல விதைகுழிகளில் விதைக்கப்பட்டன.

இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், இத்தகைய தாக்குதல்கள் தொடர்ந்தால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது அரசியல் பணிகளை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் - என்றார்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாயின், தாம் சுயபாதுகாப்புடனேயே பணிகளை மேற்கொள்ளவேண்டிய நிலைமை ஒன்று ஏற்படும் என்று அவர் கூறினார்.

## திருமலை முற்றாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைப்பட்டன.

செல்வநாயகபுரம் அரச பண்ணை வீட்டில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் அலுவலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டது. இதில் போராளிகள் இருவர், புலிகளின் தேசியத் துணைப்படை வீரர் ஒருவர், பொதுமகன் ஒருவர் என நால்வர் உயிரிழந்தனர்.

வித்துடல்களும், பூதவுடலும் நேற்றுமுன்தினம் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. பின்னர் போராளிகளின் வித்துடல்கள்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இவர்களின் படுகொலைகளுக்குக் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியே நேற்று முழு அளவில் அடைப்பு இடம்பெற்றது. திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை இதற்கான அழைப்பை விடுத்திருந்தது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், நீதிமன்றங்கள், பாடசாலைகள் எவையும் இயங்கவில்லை. மூவினத்தவரதும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. பொதுச்சந்தையில் பெரும்பான்மையின மீனவர்கள் மீன்களைக் கொண்டுவந்து கொட்டி வைத்திருந்தனர். எனினும், அவற்றை வாங்குவதற்கு எவரும் இருக்கவில்லை என்று எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. வீதிகளில் மக்களதும் வாகனங்களினதும் நடமாட்டங்கள் வெகுவாகக் குறைந்திருந்தன.

மூவின மக்களும் நெருக்கமாக வாழும் பகுதிகளில் ஒருவித பதற்றநிலை காணப்பட்டது.

அன்புவழிபுரம், 6ஆம் கட்டை, கூனித்தீவு, பெரியகுளம், சாம்பல்தீவு போன்ற கிராமங்கள் சோகத்தில் மூழ்கியிருந்தன. உயிரிழந்த போராளிகளும் பொதுமகனும் இந்தப் பகுதிகளையே சேர்ந்தவர்கள்.

பெரும்பான்மையினரின் ஆதிக்கம் உள்ள அநுராதபுரச் சந்தி, மட்கோ சந்தி, நகரின் மத்திய பகுதி, புறநகரப் பகுதிகள் மற்றும் முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் உள்ள ஜமாலியா ஆகிய பகுதிகளிலும் வழமைக்கு மாறாக அடைப்பு கடைப்பிடிக்கப்பட்டது. அவை அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

தமிழர்கள் அதிகம் வாழும் மூதூர் கிழக்கு, தெற்குப் பகுதிகள், கிண்ணியா, தம்பலகாமம் மற்றும் கரையோரத் தமிழ்க் கிராமங்கள் அனைத்திலும் முழு அளவில் அடைப்பு இடம்பெற்றது. இப்பகுதிகளில் அத்தியாவசிய கடைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், திரையரங்குகள் என்பனவும் மூடப்பட்டிருந்தன. வைத்தியசாலைகளில் கிளினிக்குகள் இயங்கவில்லை. அடைப்பு அமைதியாக நடைபெற்றபோதும், சில இடங்களில் ஓரிருவன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

பகல் 10.30 மணியளவில் தம்பலகாமத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த ஜீப் ஒன்றை நோக்கி கிரனேட் வீசப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர். ஜீப்பின் அருகில் குண்டு வீழந்தபோதும் அது வெடிக்கவில்லை.

- பகல் 11.35 மணியளவில் அநுராதபுரம் சந்தியில் இராணுவக் காவலரண் ஒன்றில் கடமையிலிருந்த சிப்பாய் ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் குறிப்பிட்ட சிப்பாய் கையில் காயமடைந்தார் என்று பொலீஸார் கூறினர்.

பிற்பகலில் திருகோணமலை - நிலாவெளி வீதியில் அலஸ் தோட்டம் பகுதியில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டு போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டது. பொலீஸார் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். (க-3-151)


PC Accessories Peripherals

| | | |
|---|---|---|
| TV Card | Network cards | Head phones |
| Woofers,2.1,4.1,5.1 | Hub/Switch | Cartridges |
| UPS | Memory cards | Ribbons |
| Pen drives | Fax modems | Toners |
| Printers | Capture cards | Refills |
| Combo/DVD Drives | wireless keyboard | Photo quality papers |
| Digital Cameras | wireless mouse | USB hubs |
| Scanners | Home theater sys. | Power supply |

VISIT FOR SPECIAL PRICES

MICRO PC SYSTEMS

யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை 021 222 5893

நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

IBMS

மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

விண்ணப்ப முடிவு திகதி 25.07.2005 வரை நீடிப்பு

# 410, K.K.S. Road, Jaffna

NMMV Rd, Nelliady Sangaththanai, Chavakachcheri


# ரணில் அமெ.விஜயம்; புஷ்ஷுடன் சந்திப்பு?

கொழும்பு,ஜூலை13

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இன்னும் சில தினங்களில் அமெரிக்கா விற்குச் செல்லவுள்ளார்.

வாஷிங்ரனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் உட்படப் பலமுக்கிய பிரமுகர்களை ரணில் சந்தித்துப் பேசவுள்ளார்.

வாஷிங்ரனில் நடைபெறவுள்ள கருத்தரங்கொன்றில் சொற்பொழிவாற்றுவதற்காகவே ரணில் வாஷிங்ரன் செல்லவுள்ளார். இலங்கை அரசியல் நிலைவரம் குறித்தும், ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ஐ.தே.க. இறங்கியிருப்பது குறித்தும் ரணில் வாஷிங்ரனில் அமெரிக்கப் பிரமுகர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளார். (க-3)

## உதயனுடன் கல்விச்சுடர்

5 ஆம் தர புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கல்விச்சுடர் இன்றைய உதயனில் வெளியாகின்றது.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய அரசியல் நிலைவரம் பற்றியும், இத்தகையதொரு சூழ்நிலையில் எதிர்காலத்தில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வர். (க-3)

## ஐ.தே.க. பேரணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமான இந்தப் பாதயாத்திரை லிப்டன் சுற்றுவட்டத்தில் முடிவடைந்தது அங்கு இறுதிக்கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. அதில் ஐ.தே.க. தலைவர் ரணில் உட்படக் கட்சியின் முக்கிஸ்தர்கள் பலர் உரையாற்றினர்.

முன்னதாக நேற்றுக்காலை 11 மணிக்கு தெஹிவளையிலிருந்து 'மக்கள் சக்தி'ப் பேரணி ஆரம்பமானது. ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண, பிரதேச மற்றும் நகரசபை உறுப்பினர்களும், மாவட்ட அமைப்பாளர்களும், இளைஞர் அணி, மாதர் அணித் தலைவர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கப் பிரிவின் தலைவர்களும் ஊர்வலத்தில் இணைந் திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் மலிக் சமரவிக்ரம, சிரேஷ்ட பிரதித் தலைவர் கரு ஜயசூரிய உட்படக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களும் தெஹிவளையிலிருந்து மக்களோடு மக்களாக ஊர்வலத்தில் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

மக்கள் எண்ணிக்கை ஆரம்பத்தில் குறைவாக இருந்தபோதும் வெள்ளவத்தை பகுதிக்குப் பேரணி வந்தபோது பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்டிருந்தனர். தென்பகுதியிலிருந்து மட்டுமன்றி, கிழக்கு மாகாணத்திலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் பேரணிக்காக பஸ்களில் வந்திறங்கினர்.

காலி வீதியில் ஐ.தே.க.பேரணிக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. வீதியின் இருமருங்கிலும் திரண்டிருந்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் ஐ.தே.க தலைவருக்குக் கைகளை அசைத்துத் தமது வாழ்த்தினைத் தெரிவித்தனர். அவர்களில் பலர் 'எதிர்கால ஜனாதிபதிக்கு ஜயவேவா' (வெற்றி) என்று கோஷமெழுப்பினர்.

மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாதுகாப்புக் கடமையில் நூற்றுக்கணக்கான பொலீஸார் ஈடுபட்டிருந்தனர். மக்கள் வெள்ளம் அலைமோதியதால் பொலீஸார் ஆங்காங்கே சிரமப்படவேண்டியிருந்தது. தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிய, கொள்ளுப்பிட்டி கொம்பனித்தெருவினூடாக லிப்டன் சந்தியை பேரணி வந்தடைந்தபோது மக்கள் கூட்டம் அலைமோதியது. லட்சக்கணக்கானோர் அதில் இணைந்திருந்தனர்.

பேரணியை முன்னிட்டு பொலீஸார்மாற்று போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தபோதும், பேரணி பல மணிநேரம் தொடர்ந்து சென்றுகொண்டிருந்த காரணத்தினார் பல வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக்கூட்டம் லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற்றபோது அந்தப் பகுதியில் மக்கள் நிற்கக்கூட இடமில்லாமற்போயிற்று. லிப்டன் சுற்றுவட்டத்தில் ஐ.தே.க. தலைவர் உரையாற்றும் போது கூட கொள்ளுப்பிட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஊர்வலம் வந்துகொண்டிருந்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர். (க-3)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பான பயணத்துக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்காகக் கடந்த 30 ஆம் திகதி அரசுக்கு இருவாரக் காலக்கெடு விதித்திருந்தனர்.

புலிகளின் காலக்கெடு முடிவடைவதற்கு இரு நாள்கள் இருக்கையில் அரசுத் தரப்பு தனது பதிலை நேற்றுமுன்தினம் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவித்தது. அந்தப் பதில் நேற்று விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டது.

அரசு அனுப்பிவைத்துள்ள அந்தப் பதிலில் புலிகளுக்கு அவ்வளவாகத் திருப்தியில்லை என்று அறியவந்தது. இதையடுத்து அவர்கள் அரசின் திட்டத்திற்கான மாற்று யோசனைகளடங்கிய திட்டம் ஒன்றை விரைவில் கண்காணிப்புக் குழு ஊடாக அரசுக்கு அனுப்பி வைப்பார்கள் என்று விடயமறிந்த வட்டாரங் கள் தெரிவித்தன.

அரசுக்குப் புலிகள் விதித்த காலக்கெடு நாளையுடன் நிறைவுபெறுகிறது என்பது குறிப் பிடத்தக்கது. (க-3)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தளாயில் இருந்து வந்துகொண்டிருந்த பொலீஸார் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் உடனடியாகத் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதலைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு விரைந்த பொலீஸாரும் இராணுவத்தினரும், அருகில் இருந்த நலன்புரி நிலையம் ஒன்றினுள் கூட்டாகத் தேடுதல் நடத் தினர். ஆழிப் பேரலையால் தமது வாழ்விடங் களை இழந்த மக்கள் அந்த நலன்புரி நிலையத்தில் வசித்து வருகின்றனர். தேடுதலில் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)

## காந்தரூபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஈகச்சுடரினை ஏற்றிவைக்க, கடற்றொழிலாளர் சமாசங்களின் இணைப்பாளர் மோகன் மலர்மாலைகளை அணிவித்தார்.

அறிவுச்சோலை மாணவர்களின் இசை நிகழ்வாக உடற்பயிற்சிக் கண்காட்சியும் வெளி அரங்க நிகழ்வும் நடைபெற்று, உள் அரங்க நிகழ்வாக காந்தரூபன் அறிவுச்சோலை, காந்தரூபன் செஞ்சோலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (3)

## மரண அறிவித்தல்

### துரைராஜா நாகநாதன்

09.07.2005 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரும் சித்தன்கேணி, டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 6 , நிஹால் சில்வா மாவத்தையைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்டவருமான T.N.N. நடமாடும் வாணிப உரிமையாளர் துரைராஜா நாகநாதன் அவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2005) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் பொரளை றேமன் மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/ 5 ,சிவகுருநாதன் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(17692) (24-14-45-38)

தகவல்:
குடும்பத்தினரும்
உறவுகளும்.


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.